பக்கங்கள்: 13

# காலைக்கதிர்
Kalaikkathir

விழியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 பங்குனி 07 புதன்கிழமை 20.03.2024 கதிர் 134

## வெடுக்குநாறிமலை ஆதி சிவன் கோயில் விவகாரம்:

# கைதான 8 பேரும் வழக்கிலிருந்து நேற்று நீதிமன்றத்தால் விடுவிப்பு



வவுனியா மாவட்டம் வெடுக்குநாறி மலை, ஆதி சிவன், ஆலயத்தில் சிவா ரத்திரி பூசை வழிபாட்டில் ஈடுபட்டிருந்தபோது கைது செய்யப்பட்ட ஆலய பூசகர் உள்ளிட்ட 8 பேரும் நேற்று அவர்கள் மீதான ☞2

## இது ரகசியம் அல்ல!

கடைசியில் சாக்குக்குள் இருந்து பூனைவெளியேகுதித்துவிட்டதுஎன்ற கதையாக, தமிழ் அரசுக் கட்சிக்கு எதிரான வழக்குகள் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர்களான சுமந்திரனுக்கும் சிறீதரனுக்கும் இடையில் நிலவி வந்த மௌனம் ஒரு முடிவுக்கு வந்திருக்கிறது. அவர்கள் இருவரும் உள்ளடங்கலாக கட்சயின் மூத்த உறுப்பினர்கள் பலர் வவுனியாவில் ஒன்றுகூடி வழக்குத் தொடர்பில் ஆராய்ந்திருக்கிறார்கள்.

வழக்குப் போட்டதிலிருந்து இதுவரையில் அந்த விடயம் குறித்து சீறிதரனும் சுமந்திரனும் நேரில் ஒரு வார்த்தைகூடப் பேசிக் கொண்டதில்லை. வழக்கின் பின்னர் இருவரும் நேரில்சந்தித்துக்கொள்ளும் பல சந்தர்ப்பங்கள் வாய்த்தன. ☞2

## கோப் குழுவில் இருந்து எதிர்கட்சியைச் சேர்ந்த 7 பேர் பதவி விலகினர்

கோப் எனப்படும் பொது முயற்சியாண்மைக்கான நாடாளுமன்ற தெரிவுக்குழுவில் இருந்து ஏழு எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் பதவி விலகினர்.

அந்தக் குழுவின் புதிய தலைவராக ரோஹித அபேகுணவர்தன நியமிக்கப்பட்டமைக்கு எதிர்ப்பு தெரிவித்தே அவர்கள் தமது பதவிகளில் இருந்து விலகியுள்ளனர். ☞8

## தான்விட்ட தவறை ஏற்றுக்கொண்டு மனிப்பு கேட்கவேண்டும் சபாநாயகர்

### நாடாளுமன்றத்தில் சுமந்திரன் வலியுறுத்து

நிகழ்நிலை காப்புச் சட்டம் தொடர்பில் உயர் நீதிமன்றத்தின் பரிந்துரைகளை மேற்கொள்ளாது விட்ட தன் தவறை ஏற்றுக்கொண்டு சபாநாயகர் மன்னிப்புக் கேட்க வேண்டும் என்று இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் யாழ். மாவட்ட நாடாளுமன்றஉறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்றைய தினம் சபாநாயருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையின் மீது உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நிகழ்நிலைச் சட்டம் சம்பந்தமான விடயத்தில் வாசிக்கும் திறனுடைய அனைவராலும் உயர் நீதிமன்றம் குறிப்பிட்ட விடயங்களை புரிந்து கொள்ளமுடியும். அதனைப் புரிந்து செயற்படுவதற்கு சட்டத்தில் தேர்ச்சி அவசியமில்லை.

உயர் நீதிமன்றம் வழங்கிய பரிந்துரைகளை வாசித்து கிரகித்துச் செயற்படும் இயலுமை சபாநாயகருக்கு இல்லையாயின் அவர் அப்பதவியில் இருந்து செயற்பட முடியுமா? அதனடிப்படையில் தான் அவர் மீதான நம்பிக்கை எமக்கு அற்றுப்போயுள்ளது.

அண்மையில் முன்னாள் சுகாதார அமைச்சர்கெஹலியவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப்பிரேரணை கொண்டுவரப்பட்ட சந்தர்ப்பத்தில் அதனை தோற்கடித்தீர்கள். தற்போது அவர் எங்கிருக்கின்றார் என்பது உங்களுக்குத் தெரியும்.

அதுபோன்றுதான் சபாநாயருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையையும் தோற்கடித்தால் ☞2

## மாகாண சபைகள் தேர்தல் நடக்காததற்கு சுமந்திரன் எம்.பியின் அழுத்தமே காரணம்

### நாடாளுமன்றில் நீதி அமைச்சர் எழுந்தமானக் குற்றச்சாட்டு

மாகாண சபைத் தேர்தல்கள் பிற்போடப்படுவதற்கு தமிழ் அரசுக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் அப்போதைய பிரதமர் ரணில்விக்கிரமசிங்கவுக்கு வழங்கிய அழுத்தமே காரணம் என்று குற்றஞ்சாட்டியுள்ளார் நீதி,சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாச ராஜபக்ச.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற சபாநாயகருக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றுகையில்மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சபாநாயகருக்கு எதிரானநம்பிக்கையில்லாப் பிரேரணையில் ஒன்பது குற்றச்சாட்டுக்கள் முன் வைக்கப்பட்டுள்ள. அந்த ஒன்பது குற்றச்சாட்டுக்களும் பொய்யானவையாகும். ஆரசமைப்புப் பேரவையில் உள்ள இருவரே அதனை மீறியுள்ளனர். ☞9

## பொய் வழக்குப் போட்டனர் நெடுங்கேணிப் பொலிஸார்

### நாடாளுமன்றில் சாணக்கியன், கஜேந்திரன் எகிறல்

வெடுக்குநாறி மலையில் தொல்பொருளியல் பகுதிகளுக்கு எந்தச் சேதமும் ஏற்படாத நிலையில் பொலிஸார் பொய்வழக்கு போட்டுள்ளனர் என்று இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் மற்றும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின்நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் ஆகியோர்தெரிவித்தனர்.

நாடாளுமன் ☞2

## தொல்பொருளியல் சட்டத்தை திருத்தப் போகிறதாம் அரசு

தொல்பொருளியல் சட்டங்களைத் திருத்துவதற்கு எதிர்பார்த்திருப்பதாகநீதிஅமைச்சர் விஜயதாச ராஜபக்ச தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்றையதினம் வெடுக்குநாறிமாலைஆதி சிவன்ஆலயம்சம்பந்தமாக எழுந்தவாதப்பிரதிவாதத்தின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"தொல்பொருளியல் சட்டங்களைமீறும்குற்றச் சாட்டுக்களில் கைது செய்யப்படுபவர்களுக்கு மாவட்டநீதிமன்றங்களின் ஊடாகபிணை அனுமதி வழங்க முடியாது.

அவர்களுக்கு ☞2

## சபாநாயகராக அமர்ந்த பின்னரும் மகிந்த யாப்பா அரசியல் செய்தார்

### லக்ஸ்மன் கிரியெல்ல கடும் விமர்சனம்

சபாநாயகர் பதவியில் மஹிந்த யாப்பா அபேவர்த்தன அமர்த்தப்பட்டதன் பின்னரும் அவர் அரசியல் செயற்பாடுகளில் ஈடுபட்டார் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பிரதம கொரடாவும்நாடாளுமன்ற உறுப்பினருமான லகஸ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்றையதினம் சபாநாயருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையின் மீது உரையாற்று ☞2

## மேலும் 200 மதுபான நிலையங்களுக்கு உரிமங்கள் வழங்க ஆளும்தரப்புத் திட்டம்

### நாடாளுமன்றில் போட்டுடைத்தார் சஜித்

எப்.எல். உரிமம் 4 இன் கீழ் 200 மதுபான அனுமதிப் பத்திரங்கள் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. அதில் 15 பேருக்கு ஏற்கனவே இந்த அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டு விட்டதாகவும், இதற்காக 2 கோடி ரூபா கப்பமாக அறவிடப்பட்டுள்ளதாகவும் எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச நேற்று நாடாளுமன்றத்தில் வெளிக்கொணர்ந்தார்.

6 மதுபான உற்பத்திசாலை அனுமதிப் பத்திரங்களும் வழங்கப் பட்டுள்ளன. இதனைக் கருத்திற்கொண்டே மது வரி ஆணையாளராக குணசிறி மீண்டும் நியமிக்கப்பட்டுள்ளார். தேர்தலை இலக்காக் கொண்டு பணம் சேகரிப்பதான செயற்பாடா இது என்ற சந்தேகம் எழுவதால் இதன் உண்மைத்தன்மையை வெளிப்படுத்துமாறும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார். ☞8

## காங்கேசன்துறையின் முழுமையான அபிவிருத்திக்கு இந்தியா நிதி உதவி

காங்கேசன்துறை துறைமுகத்தை முழுமையாக அபிவிருத்தி செய்வதற்கு நிதியுதவியை வழங்க இந்திய அரசு இணக்கம்தெரிவித்துள்ளது.

இதனடிப்படையில் 61.5மில்லியன்அமெரிக்க டொலர்நிதியுதவிவழங்கப் படவுள்ளது.

இந்தவிடயம்குறித்து இலங்கைக்கான இந்திய உயர்ஆணையாளர்சந்தோஷ் ஜாமற்றும்துறைமுகங்கள், கப்பல்துறை, விமான சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா இடையிலான சந்திப்பொன்று அமைச்சில் அண்மையில் இடம்பெற்றபோதே இந்த விவர் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இதன்போது, இலங்கை மற்றும் இந்தியா இடையிலான ஒத்துழைப்பை விரிவுபடுத்தவும் அதிக அளவிலான இந்திய சுற்றுலாப் பயணிகளைஇலங்கைக்கு அழைத்துவரவும் இந்தியா முழுமையான ஒத்துழைப்பை வழங்குமென இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா தெரிவித்துள்ளார்.

இந்த அபிவிருத்தி திட்டத்தின் கீழ் பெருமளவிலான கப்பல்கள் மற்றும் படகுகள் துறைமுகத்திற்குள்நுழைவதற்கு ஏற்ற வகையில் துறைமுகம் 30 மீற்றர் ஆழப்படுத்தப்ப டவுள்ளதுடன், புதிய அலைதாங்கியை நிர்மாணிக்கவும் ☞2

## பாடசாலைகளில் செயற்கை நுண்ணறிவு கல்விக்கான ஒப்பந்தம் நேற்று கைச்சாத்து

### மைக்ரோ சொஃப்ட் நிறுவனத்துடன் புரிந்துணர்வு

தரம்8இற்குமேற்பட்ட மாணவர்களுக்கான தகவல் தொழில்நுட்பப் பாடத்தில் செயற்கை நுண்ணறிவு விடயப் பரப்பை உள்வாங்குவதற்கானமுன்னோடித் திட்டத்தைசெயல்படுத்துவது தொடர்பானபுரிந்துணர்வு ஒப்பந்தம் கல்வி அமைச்சுக்கும் மைக்ரோ சொஃப்ட்நிறுவனத்திற்கும் இடையில் நேற்று ஜனாதிபதிஅலுவலகத்தில் கைசாத்திடப்பட்டது.

20 மாவட்டங்களில் 20 பாடசாலைகளைத் தெரிவு செய்து தரம் 8இற்கு மேற்பட்ட மாணவர்களுக்கான இந்த முன்னோடி திட்டத்தை செயல்படுத்த தீர்மானிக்கப்பட் டுள்ளதோடு, அதற்குஅவசியமான ☞8

காலைக்கதிர் Kalaikkathir

# வெடுக்குநாறி அடாவடிகளை கண்டித்து யாழ். பல்கலை மாணவர்கள் போராட்டம்






வவுனியா - வெடுக்குநாறிமலை ஆதிசிவன் ஆலயத்தில் அரங்கேறிய பொலிஸாரின் அடாவடித்தனங்களைக் கண்டித்து யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்கள் கவனவீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.

பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நேற்றுமதியம் யாழ்ப்பாண பல்கலைக்கழக முன்றலில், இடம்பெற்ற இந்த கவனயீர்ப்புப் போராட்டத்தில் யாழ்ப்பாண பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தினரும் கலந்துகொண்டிருந்தனர்.

மாணவர்களின் போராட்டம் காரணமாக இராமநாதன் வீதியின் போக்குவரத்து சில மணி நேரம் தடைப்பட்டிருந்தது.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள், வடக்கும் கிழக்கும் தமிழர் தாயகம், வெடுக்குநாறி எங்கள் சொத்து, மயிலத்தமடுஎங்கள்சொத்து, திட்டமிட்ட கைதுகளை நிறுத்து, சிங்கள பௌத்த மயமாக்கலை உடன்நிறுத்து, தையிட்டி எங்கள் சொத்து, நீராவியடி எங்கள் சொத்து, குருந்தூர்மலை எங்கள் சொத்து, மண் துறந்த புத்தருக்கு மண் மீது ஆசையா? உள்ளிட்ட பல கோசங்கலை எழுப்பினர்.

## இனி இது .....

அப்போதும்கூட அவர்கள் வேறு விடயங்களைப் பற்றிப் பேசினரே தவிர வழக்குத் தொடர்பில் மறந்தும் வாய் திறக்கவில்லை. நாடாளுமன்றத்தின் உணவகத்தில் இருவரும் அருகருகே இருந்து அன்னியோன்னியமாகப் பேசினார்கள் என்றபோதும் வழக்குத் தொடர்பில் எதுவும் பேசவில்லை என்பது சமூக ஊடகங்களில் பரிகாசத்திற்கும் நக்கலுக்கும் உரியதாக உலாவந்தது.

சிறீதரன் பேசியிருக்கலாமே என்று சுமந்திரன் ஆதரவாளர்களும் கட்சித் தலைவர் எதற்குப் பேசவேண்டும் சுமந்திரன்தான் சிறீதரனுடன் பேசியிருக்கவேண்டும் என்று சிறீதரன் ஆதரவாளர்களும் மாறி மாறி கடித்துக்கொள்ளும் அளவிற்கும் சில சமயங்களில் இந்த விவாதம் சென்றதுண்டு. தற்போது அவை எல்லாம் முடிவுக்கு வந்துள்ளதாகத் தெரிகிறது. வவுனியாவில் ஞாயிற்றுக்கிழமை கட்சி அலுவலகத்தில் நடந்த கூட்டத்தில் சிறீதரனும் சுமந்திரனும் நேருக்கு நேர் இருக்க கட்சியின் ஏனைய மூத்த உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, சி.வி.கே.சிவஞானம், குலநாகம், கலையரசன், யோகேஸ்வரன், சட்டத்தரணி கே.வி.தவராசா, சத்தியலிங்கம் உள்ளிட்ட பலர் வடக்கில் இருந்தும் கிழக்கில் இருந்தும் கலந்துகொண்டனர்.

வழக்கு விடயம் குறித்தே கூட்டத்தில் முக்கியமாக ஆராயப்பட்டுள்ளது. திருகோணமலையில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குத் தொடர்பில் கட்சி எடுத்த நிலைபாடு முற்றிலும் சரி என்று சொல்லமுடியாது என்ற வகையில் சுமந்திரன் விளக்கமளிக்கப்போக அங்கு, கே.வி.தவராசாவுக்கும் அவருக்கும் இடையில் கடிபாடு ஏற்பட்டுள்ளது. கடுமையான காரசாரமான வாதங்கள் இரு தரப்பிலிருந்தும் தெறித்துள்ளன. ஒரு கட்டத்தில் தவராசா கூட்டத்திலிருந்து வெளியேறிப் போய்விட்டார். தன்னைத்தவிர மற்றவர்களுக்காக நீதிமன்றில் வழக்காடும் அவரை வைத்துக்கொண்டு வழக்கு விடயங்கள் குறித்து எப்படி ஏனையவர்களுடன் கலந்துரையாட முடியும் என்று சுமந்திரன் போட்டுத் தாக்கியதே அவர் கோபப்பட்டு வெளியேறியதற்கான காரணம் என்றும் சொல்லப்பட்டது.

எப்படியிருந்தாலும் கூட்டத்தின் முடிவு என்னவென்பது அதில் கலந்துகொண்ட யாருக்கும் உறுதியாகத் தெரியாது. இந்த வழக்குத் தொடர்பில் கட்சிக்குள் நிலவிவந்த இறுக்கமான மௌனம் உடைக்கப்பட்டிருக்கின்றது. இனி வழக்கில் சுமந்திரன் என்ன நிலைப்பாட்டை எடுக்கப்போகிறார் என்பதைப் பொறுத்தே கட்சியின் எதிர்காலமும் வழக்கின் எதிர்காலமும் இருக்கும் என்கிறார்கள். ''என்ன இருந்தாலும் சுமந்திரன் ஒருநாளும் கட்சியை விட்டுக்கொடுக்கமாட்டார். அதில் எனக்கு முழுமையான நம்பிக்கையுண்டு'' என்று ஒருவர் சொன்னார். வழக்கில் தான் எடுக்கப்போகும் நிலைப்பாடு என்ன என்பதைச் சுமந்திரன் கடைசிவரை தெளிவுபடுத்தாததே, அல்லது அவர் கூறியது மற்றவர்களுக்குத் தெளிவாகப் புரியாததமையே இதற்குக் காரணம்.

இனி ஏப்ரல் 5, வழக்கு சுமந்திரனின் சமர்ப்பணத்துக்காக மீண்டும் எடுக்கப்படும்போது அவர் என்ன சொல்லப் போகிறார் என்பதில்தான் தங்கியிருக்கிறது. வழக்குப் போடப்பட்டபோதும் சரி அதன் பின்னரும் சரி அவற்றின் பின்னால் சுமந்திரன்தான் இருக்கிறார் என்று கடுமையான விமர்சனங்கள் எல்லாத்தரப்பிலிருந்தும் முன்வைக்கப்பட்டன. பல நேர்காணல்களில் சுமந்திரனேகூட அதனைக் குறிப்பிட்டிருப்பார். செல்லும் செல்லாதது எல்லாம் செட்டியார் கணக்கு என்ற கதையாக எல்லாப் பழியும் அவர் மீதே போடப்பட்டிருந்தது. அத்தகைய ஒரு கருத்தைக் கொண்டிருந்த காரணத்தால்தான் கட்சித் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டிருந்தவரான சிறீதரனும் இத்தனை நாட்களாக வழக்குத் தொடர்பில் சுமந்திரனுடன் பேசவில்லை, கட்சி சார்பில் வழக்கை எதிர்கொள்ளும் முடிவை எடுத்தபோது அது குறித்து சுமந்திரனுடன் ஆலோசிக்கவில்லை என்று துணிந்து நம்பலாம். இதையெல்லாம் சுமந்திரனும் மறந்திருக்கமாட்டார். எனவே அவர் வழக்கில் என்ன நிலைப்பாட்டை எடுப்பார் என்பது ஏப்ரல் 5 வரை கட்சித் தலைவர்களுக்கு 'திக் திக்' நிமிடங்கள்தான்.

**இடிமின்னல்**

(idiminnal@gmail.com)

## கைதான 8....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வழக்குத் தள்ளுபடி செய்யப்பட்டு விடுதலை செய்யப்பட்டனர்.

மார்ச் 8 சிவராத்திரி அன்று இரவு வெடுக்குநாறிமலை ஆதி சிவன் ஆவயத்தில் பூசை வழிபாடுகளை மேற்கொண்ட ஆலயப் பூசகர் உள்ளிட்ட 8 பேரும் பொலிஸதரால் கைது செய்யப்பட்டு மறுநாள் வவுனியா நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். அவர்கள் மார்ச் 12 வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டனர். பின்னர் அந்த விளக்கமறியல் மார்ச் 19 வரை நீடிக்கப்பட்டது.

நேற்று வழங்கு மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது பொலிஸார் அவர்கள் மீதான குற்றச்சாட்டை நிரூபிக்கத் தவறிய காரணத்தால் வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டு 8 பேரும் விடுவிக்கப்பட்டனர்.

இது தொடர்பில் சட்டத்தரணி என்.சிறிகாந்தா தெரிவித்ததாவது:

கடந்த சிவராத்திரி தினத்தன்று வெடுக்குநாறிமலை ஆதி சிவன் ஆலயத்தில் சிவராத்திரி வழிபாட்டில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது பொலிசாரால் 8 பேர் கைது செய்யப்பட்டு கொடுமைப்படுத்தப்பட்டு, நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டிருந்தனர். பொலிஸ் தரப்பில் தொல்பொருள்கள் கட்டளைச் சட்டத்தின் கீழ் அவர்கள் மீது வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

மார்ச் 12 இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது சந்தேக நபர்கள் சார்பில் மன்றில் முற்பட்டிருந்த சட்டத்தரணிகள் பொலிஸ் தரப்பில் சொல்லப்பட்ட பல்வேறு விடயங்களையும் ஆட்சேபித்து, எந்தவொரு இடத்திலும் சட்டம் மீறப்படுவில்லை என்ற நிலைப்பாட்டை வலியுறுத்தி இருந்தார்கள். பொலிஸ் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை அவதானிக்கின்றபோது தொல்பொருட்கள் கட்டளைச் சட்டம் இந்த வழக்கிற்குப் பொருந்தாது என்று சுட்டிக் காட்டப்பட்டு அவர்களுக்குப் பிணை வழுங்குமாறு வாதிட்டோம்.

ஆயினும், பொலிஸ் தரப்பில் குறித்த கட்டளைச் சட்டத்தின் பிரிவு 15 உப பிரிவு சீயினை சுட்டிக்காட்டி அவர்கள் விளக்கமறியலில் வைக்கப்படவேண்டும் என மீண்டும் கோரப்பட்டது. பொலிஸ்தரப்பில் இறுதி அறிக்கை வடிவில் குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்படுவதற்கு ஒருவார கால அவகாசத்தை நீதிவான் வழங்கியிருந்தார்.

அதனால் இன்று வரை (நேற்று) சந்தேகநபர்கள் அனைவரையும் விளக்கமறியலில் வைக்கும் உத்தரவை வழங்கியிருந்தார். சட்டமா அதிபருடைய ஆலோசனையையும், அறுவுறுத்தல்களையும் பெறுவதற்காக வழக்கின் விசாரணை கோவையையும், தங்கள் வசம் இருக்கும் அனைத்து கோவைகளையும் சட்டமா அதிபர் அலுவலகத்திற்கு அனுப்ப வேண்டி இருப்பதால் இன்றைய தினம் குற்றப்பத்திரத்தை தாக்கல் செய்ய முடியவில்லை எனப் பொலிஸார் மன்றில் தெரியப்படுத்தினர்.

பொலிஸார் குற்றத்ப் பத்திரத்தை தாக்கல் செய்ய தாங்கள் ஒத்துக் கொண்ட தினத்தில் அதனைத் தாக்கல் செய்யாமல் சட்டா அதிபரின் அறிவுரையை இப்போது நாடியிருப்பது இந்த வழக்கின் சட்ட அடிப்படை தொடர்பிலே அவர்கள் திட்டவட்டமான தெளிவான நிலைப்பாட்டில் இல்லை என்பதைக் காட்டுவதாக எமது வாதங்களை முன்வைத்தோம். இருட்டு அறை ஒன்றில் கறுப்புபூனையை தேடுவது போன்றுதான் சந்தேகநபர்களுக்கு எதிரான குற்றச்சாட்டுக்களைப் பொலிஸார் தேடிவருகின்றார்கள் என்று நீதிமன்றின் கவனத்திற்குக் கொண்டு வந்தோம்.

எங்கள் தரப்பில் செய்யப்பட்ட பல்வேறு சமர்ப்பணங்கள் தொடர்பாக பரிசீலித்த நீதிமன்றம், குற்றப் பத்திரம் தாக்கல் செய்யாது சட்டமா அதிபரிடம் தற்போது ஆலோசனை பெறுவது தொடர்பில் பல கேள்விகளை பொலிசாரிடம் கேட்டிருந்தது. இறுதியில் விவரமான தீர்ப்பிளை வழங்கியிருக்கின்றது. சந்தேகநபர்களுக்குப் பிணை மறுக்கப்படும் தொல்பொருள் கட்டளைச் சட்டம் 15 சீயின் கீழ் பொலிசார் தாக்கல் செய்துள்ளார்கள் என்பதை சுட்டிக்காட்டிய மன்று, பிரஜைகள் சுதந்திரத்தை கட்டுப்படுத்த முடியாது. இது சட்டத்திற்கோ, நீதிக்குகோ ஏற்புடையது அல்ல. குற்றச்சாட்டு நிருப்பிக்கப்படும்வரை அனைவரும் நிரபராதிகளே. அதனடிப்படையில் இந்த வழக்கில் இருந்து அனைத்து சந்தேகநபர்களையும் விடுதலை செய்து வழக்கினையும் தள்ளுபடி செய்து தீர்ப்பளித்தது - என்றார்.

விடுவிக்கப்பட்டதும் 8 பேரும் நீதிமன்ற வளாகத்தில் இருந்து வெளியே வந்த போது அவர்களது உறவினர்கள், மனைவிமார், பிள்ளைகள் அவர்களை கட்டி ஆரத்தழுவி கண்ணீர் மல்கி தமது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர்.

இதன்போபது கைது செய்யப்பட்டவர்களின் உறவினர்களும், கைதாகி விடுதலையானவர்களும் விடுதலைக்காக குரல் கொடுத்த அனைவருக்கும் நன்றி தெரிவித்தனர்.

''வெடுக்குநாறி மலையில் சிவராத்திரி வழிபாட்டில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது மிகவும் அநீதியான முறையில் நாம் கைது செய்யப்பட்டிருந்தோம். பொலிஸார் வேண்டும் என்றே எம் மீது பொய் வழக்கு போட்டு 12 நாட்கள் விளக்கமறியலில் வைத்தனர். பொலிசாரினால் முன்வைக்கப்பட்ட குற்றசாட்டுகள் எவையும் நிரூபிக்கப்படவில்லை. எங்களுடைய விடுதலைக்காக பல உறவுகள் தொடர்ச்சியாக குரல் கொடுத்துள்ளார்கள். மதத்தலைவர்கள், அரசியல்வாதிகள், ஊடகவியலாளர்கள், புலம்பெயர் உறவுகள் எனப் பலரும் குரல் கொடுத்திருக்கிறார்கள். எல்லாவற்றுக்கும் மேலாக சட்டத்தரணிகள் எமக்காக போராடி இருந்தார்கள்.

வவுனியாவிலும், நெடுங்கேணியிலும் பெரியளவிலான போராட்டம் நடைபெற்றது. அதில் பலரும் பங்குபற்றி எமக்காக குரல் கொடுத்திருந்தார்கள். எமக்காக குரல் கொடுத்த அனைத்து உறவுகளுக்கும் நன்றிகள். வெடுக்குநாறி மலை எங்களது சொத்து அதை நாம் தொடர்ந்து ஒன்றுபட்டு பாதூக்க வேண்டும்'' எனவும் தெரிவித்தனர்.

## காங்கேசன்துறையின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திட்டமிடப்பட்டுள்ளது.

அதற்கமைய, இந்தியா வழங்கவுள்ள 61.5 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியுதவியை பயன்படுத்தி, காங்கேசன்துறை துறைமுகத்தின் அபிவிருத்தி செயற்பாடுகளை ஆரம்பிக்கவுள்ளதாக இலங்கைக்கான இந்திய உயர்ஆணையாிடம் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

## தான்விட்ட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அடுத்த கட்டமாக அவரும் உரிய தண்டனையை அனுபவிப்பார்.

சபாநாயகர் மட்டுமல்ல, இந்த பிரேரணைக்கு எதிராக வாக்களிக்கும் அனைவரும் தாங்கள் படிப்பறிவு அற்றவர்கள் என்பதை நாட்டுக்கு வெளிப்படுத்துவார்கள்

சபாநாகர் தற்பொழுதாவது தனது தவறை ஏற்றுக்கொள்ளவேண்டும். உயர்நீதிமன்றத்தின் பரிந்துரைகளை வாசித்து அவை சட்டத்தில் உள்ளடக்கப்படவில்லை என்பதை குறிப்பிட்டு மன்னிப்புக் கேட்டுக்கொள்ளுங்கள.

உங்களுடைய தவறினை நீங்களே திருத்திக்கொள்ளாது விட்டால் நிலமைகள் மோசமானதாகவே அமையும். ஆகவே உங்களுடைய பதவியை இராஜினாமச் செய்து உங்கள் கௌரவத்தினைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டும் - என்றார்.

## சபாநாயகராக ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சபாநாயகர் பதவியில் மஹிந்த யாப்பா அபேவர்த்தன அமர்த்தப்பட்டதன் பின்னரும் அவர் அரசியல் செயற்பாடுகளில் ஈடுபட்டார். இதுதான் இங்குள்ள அடிப்படைப் பிரச்சினையாகும். அவர் தற்போதும் வெலிகம தொகுதியின் அமைப்பாளராக உள்ளார். இதனால் சபாநாயகர் கதிரையில் அமர்ந்த பின்னரும்கூட அவர் அனைத்து விடயங்களையும் அரசியலாகவே பார்த்தார்.

மூன்று வருடங்களாக அவர் நாடாளுமன்ற நிலையியற் குழுக்களுக்கு அவர் உரியவர்களை நியமிக்கவில்லை. அதற்குப்பின்னால் அரசியலே இருந்தது. அன்று நிதி தொடர்பான தெரிவுக்குழுவின் பதவி எதிர்க்கட்சிக்கு வழங்கப்பட்டிருந்தால் நாடுவங்குரோத்து அடையவுள்ளதை நாம் இரண்டு வருடங்களுக்கு முன்னதாகவே அறிவித்திருப்போம்.

ஆளும் தரப்பு உறுப்பினாகள் அனைவரும் நாடாளுமன்றத்தில் ஒழிந்து கொண்டனர். எனவே சபாநயகரே பொருளாதாரம் வீழ்ச்சி அடைவதற்கு பிரதானசூத்திரதாரிகளில் ஒருவராகின்றார். கோப்குழு இன்று நகைச்சுவை நாடகமாக மாறியுள்ளது.

உள்ளூராட்சிமன்றங்களுக்கான தேர்தலை நடத்துமாறு உயர் நீதிமன்றத்தின் நீதியரசர்கள் அறிவித்தனர். உயர்நீதிமன்றத்தின் தீர்மானம் தனது சிறப்புரிமையை மீறியுள்ளதாக இங்குள்ள உறுப்பினர் ஒருவர் கூறினார். அப்போது சபாநயகர் வழக்குத் தாக்கல் செய்த மூவரையும் சிறப்புரிமைக் குழுவிற்கு அழைத்தார்.

அரசமைப்புச் சபையின் ஐவர் அனுமதி அளித்தாலே நியமனங்கள் செல்லுபடியாகும். ஆனால் காதல் கடிதங்களை அனுப்பினால் தீர்மானங்களை மாற்றியமைக்க முடியுமா? சபாநாயகர் அவ்வாறு செய்தார். சபாநாயகர் ஜனாதிபதிக்கு காதல் கடிதம் எழுதினார். பொலிஸ்மா அதிபர் நியமனத்தின்போது ஆதரவு எண்ணிக்கை நான்கிலிருந்து ஐந்தாக மாறியது அப்படித்தான். அது எப்படி முடியும் என்பதை வெளிப்படுத்துங்கள் என்றார்.

## பொய்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

றத்தில் நேற்றையதினம் வெடுக்குநாறிமலை ஆதிசிவன் ஆலய விடயம் சம்பந்தமாக ஒழுங்குப் பிரச்சினையை எழுப்பி உரையாற்றியபோதே அவர்கள் மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

''பொலிஸார் பூசகரையும் ஏனைய ஏழுவரையும் பொய்யான குற்றச்சாட்டுக்களை சுமத்தியே கைது செய்துள்ளனர். வெடுக்குநாறி மலையில் தொல்பொருளியில் பகுதிகள் எவையும் சேதப்படுத்தப்படவில்லை.

அவ்வாறு தொல்பொருளியல் சின்னங்கள் சேதப்படுத்தியதாக கூறுவது பொய்யானதாகும். பொலிஸார் எட்டுப்பேரைக் கைது செய்யததன் பின்னர்தான் குற்றங்களைத் தேடிக்கொண்டிருக்கின்றார்கள்'' என்றார் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன்.

''தொல்பொருளியல் பகுதிகள் எவையும் பாதிக்கப்படவில்லை. பொய்யான குற்றச்சாட்டுக்களின் பேரிலேயே அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். பிரதேச பொலிஸாருக்கு உண்மைகள் நன்கு தெரியும். அவர்கள் இந்த விடயங்களை மிகத் தெளிவாக கூறியுள்ளனர். ஆகவே இந்த விடயத்தினை திட்டமிட்ட நடவடிக்கையாகவே நோக்கவேண்டும்'' என்றார் நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன்.

## தொல்பொருளியல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிணை அனுமதி வழங்குவாக இருந்தால் மேல்முறையீட்டு நீதிமன்றத்தின் ஊடாகவே வழங்க முடியும். அகவே தான் நாம் தொல்பொருளியில் சட்டத்தினை திருத்துவதற்கு எதிர்பார்த்துள்ளோம்'' - என்றார்.

காலைக்கதிர்
Kalaikkathir

# சர்வதேச வாய் சுகாதார தினத்தை முன்னிட்டு மாணவர்களுக்குப் பற்பசை தூரிகை வழங்கல்

சர்வதேச வாய் சுகாதாரத்தை முன்னிட்டு கிண்ணியா குறிஞ்சகேணி அரபா மகா வித்தியாலயத்தில் மாணவர்களுக்கு பற் சுகாதாரம் சம்பந்தமாக ஆலோசனை வழிகாட்டல்கள் இடம்பெற்றன.

இதன் போது மாணவர்களுக்கு பற்பசை, பற்தூரிகைகள் வழங்கி வைக்கப்பட்டன .

இந்நிகழ்வில் குறிஞ்சாச்சேணி சுகாதார வைத்திய அதிகாரி,வைத்தியர் ஏ.எம். அஜித், பாடசாலையினுடைய பிரதி அதிபர் எச்.ரிஸ்வானா, பகுதி தலைவர் எம் . ராபிக், குறிஞ்சாக்கேணி பிரதேச பொது சுகாதார பரிசோதகர் அக்ரம் ,அஸ்னஸ் ,அன்சிபா ,பேகம்மற்றும்பாடசாலையை ஆசிரியர்களும் அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.(05)







# சர்வதேச மகளிர் தின நிகழ்வு கல்முனையில்



(நூருல் ஹுதா உமர்)

மனித அபிவிருத்தி தாபனமும் பெண்கள்ஒத்துழைப்புமுன்னணியும் இணைந்து கல்முனை இஸ்லாமபாத் பொதுகட்டடத்தில்சர்வதேசமகளிர்தின நிகழ்வை திங்கட்கிழமை நடத்தியது.

வேள்வி பெண்கள் அமைப்பின் உப தலைவி எம். றிலீபா பேகம் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வுக்குபிரதமஅதிதியாகபெண்கள் ஒத்துழைப்பு முன்னணியின் செயலாளரும்,மனிதஅபிவிருத்திதாபன நிகழ்ச்சித்திட்ட இணைப்பாளருமாகிய திருமதி எஸ். லோகேஷ்வரி கலந்து கொண்டுபிரதானஉரைவழங்கினார்.

பெண்கள்அரசியல்,சமூக,கலாசார மற்றும் அபிவிருத்தி போன்றவற்றில் சமத்துவமாக செயற்படுவதற்கான வாய்ப்புகள் வழங்கப்பட வேண்டும் அதற்கு இந்தியாவில் கேரளா மாநிலத்தில்நடைமுறைப்படுத்தப்படும் பஞ்சாயத்து முறையை பின்பற்ற வேண்டும் என்ற விளக்க உரையை வழங்கினார்.

இந்நிகழ்வில் மனித அபிவிருத்தி தபான உதவி இணைப்பாளர் எம். ஐ. றியால், மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தார்கள், அரசியல் செயற்பாட்டாளர்கள் , பெண்கள் அமைப்புகள், சிவில் அமைப்புகளின், இளைஞர் அமைப்புகள்ஆகியவற்றின்முக்கியஸ்தர்கள் கலந்து கொண்டார்கள்.(05)



# யானை அட்டகாசம் வீடு பயிர்கள் நாசம்

## கிண்ணியாவில் சம்பவம்

கிண்ணியாபிரதேசசெயலாளர் பிரிவுக்குஉட்பட்டபணிச்சங்குளம், சேம்பிமோட்டைபகுதிக்குள் இரவு புகுந்த காட்டு யானைகள் பல சேதங்களை ஏற்படுத்தி உள்ளன.

இதனால் அப்பகுதி மக்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர் எனத் தெரிவிக்கின்றனர்.

வீடுகள்,25 இற்கு மேற்பட்ட தென்னை மரங்கள் வாழை மரங்கள் தோட்ட பயிர்கள் உட்பட பல பலன் தரும் பயிர்களை சேதப்படுத்திஉள்ளதாகஅம்மக்கள் தெரிவிக்கின்றனர்.

வீட்டை உடைத்துள்ளதோடு வீட்டின் ஜன்னல் கதவுகளும் உடைத்துள்ளதாக தெரிவிக் கின்றனர். இப்பகுதியில் யானை வேலிகள் இருந்தும் அவ்வேலிகளால்எவ்வித பாதுகாப்பும்பலனும் இல்லை என மக்கள் தெரிவிக்கின்றனர் ஏனைய தோட்ட பயிர்களையும் பலன் தரும் பயிர்களையும்அழித்துஉள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கிறது

இவற்றை கட்டுப்படுத்தி பாதுகாப்பு எங்களுக்கு வழங்க வேண்டும்என மக்கள்கோரிக்கை விடுக்கின்றனர்.(05)

# தெல்தெனிய றங்கல நாவலர் வித்தியாலய மாணவர்களுக்கு பாடசாலை பை வழங்கல்




(அஸ்ஹர் இப்றாஹிம்)

தமிழ்ஒப்லங்கா உதவும்கரங்கள் அமைப்பினர் மத்திய மாகாணத்தின் தெல்தெனிய கல்வி வலயத்திலுள்ள றங்கல நாவலர் வித்தியாலயத்தில் கல்வி பயிலும் 154 மாணவர்களுக்கு பாடசாலைப் பைகளையும். இப் பாடசாலையின் பயன்பாட்டிற்கு ஒலிபெருக்கி சாதனங்களையும் அன்பளிப்பு செய்தனர்.

பாடசாலை அதிபர் எஸ்.பாலசுப்ரமணியம் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் தமிழ் ஒப் லங்கா உதவும் கரங்கள் அமைப்பின் தலைவர்.எஸ்.இளந்தீபன். தெல்தெனிய. மெததும்பர கோட்டக் கல்விப் பணிப்பாளர் எஸ்.நீதிராசா. ஊடகவியலாளர் செல்லையா-பேரின்பராசா. ஞா.தயாளன்றங்கலபொலிஸ்நிலையபொறுப்பதிகாரி ஆகியோர் அதிதிகளாக கலந்து சிறப்பித்தனர்.(05)

# நீண்டநாள் போக்குவரத்து பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு



கிளிநொச்சி கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவுக்குற்பட்ட ரங்கன் குடியிருப்பு கிராமத்திற்கு நீண்ட காலத்தின் பின் பஸ் சேவை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்பு குழு தலைவரின் இணைப்பாளர் ரட்ணம் அமீர் கலந்து கொண்டு குறித்த பஸ் சேவையை ஆரம்பித்து வைத்தார்.

நீண்ட காலமாக மக்கள் தமது கிராமத்திற்கான பஸ் சேவையை மேற்கொள்ளுமாறு வேண்டுகோள் விடுத்தமைக்கமைய கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்பு குழுவின் ஏற்பாட்டில் குறித்த தனியார் பஸ் சேவை முன்னெடுக்கப்பட்டது .

ஆரம்ப நிகழ்வில் ஈழமக்கள் ஜனநாயகக்கட்சியின் கண்டாவளை அமைப்பாளர், பாடசாலையின் அதிபர் உள்ளிட்ட பிரதேச மக்கள் கலந்து கொண்டனர். (05-113)

# பாரதி தமிழ் வித்தியாலயத்தைச் சேர்ந்த மாணவிகள் தேசிய மட்டத்தில் சாதனை



(அபு அலா)

தேசிய மட்ட சமூக விஞ்ஞான போட்டியில் கிழக்கு மாகாண திருக்கோணமலை மாவட்ட பாரதி தமிழ் வித்தியாலயத்தைச் சேர்ந்த இரு மாணவிகள் தேசிய மட்டத்தில்

வெற்றிபெற்று வரலாற்று சாதனையை நிலைநாட்டியுள்ளனர்.

தேசிய மட்ட வரலாற்று சாதனையை நிலைநாட்டிய தரம் 8 ஐச் சேர்ந்த த.பிளசியா இரண்டாம் இடத்தையும், தரம் 7 ஐச் சேர்ந்த சீ.அஸ்வினிஆறாம்இடத்தையும்பெற்றுக்கொடுத்து பாடசாலைக்கும், பாடசாலை சமூகத்திற்கும், மாவட்டத்திற்கும் பெருமையை சேர்த்துக் கொடுத்ததுடன் வரலாற்றுச் சாதனையை நிலைநாட்டி வரலாற்றுத் தடத்தையும் பதிவு செய்த மாணவிகளாக இடம்பிடித்துள்ளார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இம்மாணவர்களை வழிப்படுத்திய அதிபர் சுஜந்தினி யுவராஜா மற்றும் ஆசிரியர்களான அ.அலெக்சாண்டர், திருமதி பா.ரோஷினி ஆகியோருக்குபாடசாலைஅபிவிருத்திக்குழுவினர், பெற்றோர்கள்மற்றும்நலன்விரும்பிகள்உள்ளிட்ட பலர் வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் தெரிவிக்கின்றனர்.

2023 ஆம் ஆண்டு தேசிய ரீதியில் உள்ள பாடசாலை மாணவர்களுக்கிடையில் நடைபெற்ற இப்போட்டியில் குறித்த இரு மாணவிகளும் இச்சாதனையை படைத்துள்ளமையும், அதன் பெறுபேறுகள் இம்மாதம் வெளிவந்தமையும் குறிப்பிடத்தக்கது. (05)

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## எதிர்காலத்தின் மீது அக்கறை தேவை

**தரம் 8 இற்கு மேற்பட்ட மாணவர்களுக்கான தகவல் தொழில்நுட்பப் பாடத்தில் செயற்கை நுண்ணறிவு விடயப் பரப்பை உள்வாங்குவதற்கான முன்னோடித் திட்டத்தை செயல்படுத்துவது தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தம் கல்வி அமைச்சுக்கும் மைக்ரோ சொஃப்ட் நிறுவனத்திற்கும் இடையில் நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் கைசாத்திடப்பட்டிருக்கின்றது.**

**இலங்கை இளைஞர்களின் எதிர்காலம் குறித்த மிக முன்னோடியான, தூர நோக்குமிக்க ஒரு நடவடிக்கையை ஆளும் தரப்பு மேற்கொண்டுள்ளது. அது பாராட்டப்படவேண்டியது; வரவேற்கப்படவேண்டியது. மட்டுமல்ல, தமிழ் தரப்புக்களாலும் பயன்படுத்திக்கொள்ளப்படவேண்டியது இந்தத் திட்டம். இலங்கையில் இருந்து கூலித் தொழிலாளர்களை ஏற்றுமதி செய்வதற்குப் பதிலாக தகவல் தொழில்நுட்பத்துறை வல்லுநர்களை எதிர்காலத்தில் ஏற்றுமதி செய்வதற்கான வாய்ப்பை உருவாக்கக்கூடியது.**

**மைக்ரோ சொஃப்ட் நிறுவனத்தில் இந்த விடயத்தைக் கையாளும்தரவுகள்மற்றும்செயற்கைநுண்ணறிவுத்துறையின் தலைவராக இருப்பவர் ஒரு தமிழர். தமிழ்நாட்டின் ஈரோடு மாவட்டத்தின் காரைக்குடியில் பிறந்து, வளர்ந்தவரான, நன்கு தமிழ் பேசக்கூடியவரான சிசில் மனோஜ் சுந்தர்தான் அவர். தமிழ்நாட்டில் படிப்பை முடித்த பின்னர் இந்திய வான்படையின் ராடார் துறையில் பணிபுரிந்த அவர், பின்னர் அமெரிக்கா சென்று மேற்படிப்பை முடித்து தகவல் தொழில்நுட்பத் துறைக்குள் நுழைந்தார்.**

**இலங்கையில் இப்போது கைச்சாத்திட்டதைப் போன்ற ஒரு ஒப்பந்தத்தை மைக்ரோ சொஃப்ட் நிறுவனம் ஏற்கனவே தமிழ்நாடு அரசுடனும் கையெடுத்திட்டு மாதிரித் திட்டத்தையும் அங்கு செயற்படுத்தத் தொடங்கிவிட்டது. அடுத்த கட்டமாக 1–00 அரச பாடசாலைகளுக்கு விரிவுபடுத்தப்படும் இந்தத் திட்டம் அதற்கடுத்த நிலையில் 1000 அரச பாடசாலைகளுக்கு விரிவாக்கப்படவுள்ளது.**

**உலகத்தின் எதிர்காலம் என்று சொல்லப்படும் இந்த செயற்கை நுண்ணறிவுத் துறையில் தமிழ்நாடு அரசு அக்கறை செலுத்தி அதனைத்தனது மாணவர்களுக்குகல்வி அறிவாகத்தருவதற்கு எடுத்திருக்கக்கூடிய நடவடிக்கை மிக மிக முன்னோக்கிய பெரும் பாய்ச்சல் என்கிறார் சுந்தர். செயற்கை நுண்ணறிவு மனிதர்களை மேலும் படைப்பூக்கம் உள்ளவனாக (கிரியேட்டிவ்) மாற்றும், அந்தப் படைப்பூக்கம் புதுமைகளை வளர்க்கும், அது உற்பத்தித் திறனை அதிகரிக்கும் என்கிறார் சுந்தர்.**

**இலங்கையில் 20 மாவட்டங்களில் 20 பாடசாலைகளைத் தெரிவு செய்து தரம் 8இற்கு மேற்பட்ட மாணவர்களுக்கான இந்த முன்னோடிதிட்டத்தை செயல்படுத்ததீர்மானிக்கப்பட்டுள்ளதோடு, அதற்கு அவசியமான நவீன வகுப்பறைகளையும தொழில்நுட்ப உபகரணங்களையும் வழங்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. அதன்படி கல்விச் செயற்பாடுகளை தொழில்நுட்ப முறையில் முன்னெடுப்பதற்கானஉதவிகளைமைக்ரோசொப்ட்நிறுவனத்தின் குழுவொன்று வழங்கவுள்ளது.**

**இதன்போது, பாடசாலைப் பாடத்திட்டத்தில் செயற்கை நுண்ணறிவை உள்வாங்குவதற்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்குவதாக ஜனாதிபதியிடம், மைக்ரோசொப்ட் பிரதிநிதிகள் உறுதியளித்தனர். இந்த வேலைத் திட்டத்தை 2025ஆம் ஆண்டிலிருந்து முழுமையாக நடைமுறைப்படுத்த எதிர்பார்ப்பதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேம்ஜயந்த சுட்டிக்காட்டினார்.**

**இந்நிகழ்வில் கலந்துகொண்டிருந்த இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சாங், இலங்கை மக்களுக்கு இது ஒரு சிறந்த சந்தர்ப்பம் என்றும் அதனால், அனைவரும் முழுமையான பயனடைய வேண்டியது அவசியமெனவும் வலியுறுத்தினார்.**

**தற்போதே, செயற்கை நுண்ணறிவுத் துறையில் பணியாற்றுவதற்காக உலகம் முழுவதும் 20 லட்சம் பேரைப் பணிக்கமர்த்தவேண்டி தேவை இருப்பதாகச் சுந்தர் கூறுகின்றார். அதற்கான பயிற்சிகள் இப்போது வழங்கப்பட்டுவருவதாகக் கூறும் அவர், திறமைமையை வளர்க்கும்போது அது கொள்திறனை அதிகரிக்கும் அது முதலீடுகளை ஈர்க்கும் என்கிறார். அதாவது இந்தத் செயற்கை நுண்ணறிவுத் துறையில் வல்லுநர்களை உருவாக்குவதற்கான அடித்தளத்தை முன்கூட்டியே இங்கு இடுவதன் மூலம் எதிர்காலத்தில் இவர்களைத் தேடி முதலீடுகள் இங்கு வரும் என்பது அவரது கணிப்பு.**

**இவ்வாறு இளைய சமுதாயத்திற்கு மிகச் சிறந்த எதிர்காலத்தை உருவாக்கக்கூடிய இந்த விடயத்தில் தமிழ்த் தலைவர்களும் அதிக அக்கறை செலுத்தி அந்தக் கல்வி எமது மாணவர்களுக்கும் பரந்தளவில் கிடைப்பதற்குரிய வழிவகைகளை உறுதிப்படுத்தவேண்டும். அதனை வடக்கு கிழக்கு மாகாணங்களில் இன்னும் விரைவாகவும் அதிகமாகவும் செற்படுத்துவதற்கான வழிவகைகளைத் தேடவேண்டும். எதிர்காலம் இல்லாத ஓரிடத்திலிருந்து வெறும் அரசியலை மட்டும் அடுத்த தலைமுறையினர் செய்யப்போவதில்லை என்பதால் அவர்களுக்கான எதிர்காலத்திற்கு வழிகாட்டும் இதுபோன்ற செற்பாடுகளிலும் தமிழ் அரசில்வாதிகள் முழு அக்கறை செலுத்தவேண்டும்.**

# நல்லன பெருக....

**என்.மாதவன்**

தமது வாழ்வின் நேரத்தை எப்படி ஒருவர் செலவழிக்கிறாரோ அந்த வகையிலேயே அவரது முன்னேற்றம் அமையும். தமது வயிற்றுப்பாட்டுக்காக ஒருவர் பல்வேறு பணிகளில் ஈடுபடலாம். அவருடைய நேரம் பெரும்பாலும் அந்த பணிகளுக்காகவே செலவிடப்படும். ஆனால் அதேநேரம் ஒருவர் தமது ஓய்வு நேரத்தை எப்படிச் செலவழிக்கிறார் என்பதைக் கவனித்தால் அவரது வாழ்வின் நோக்கங்கள் புலப்படும்.

பொதுவாகவே மனிதர்கள் தனிமையில் மட்டுமே அமைதியாக இருப்பர். அறிமுகமான நபர் எதிர்ப்படுகையில் இயல்பாகவே உரையாடத் தொடங்கிவிடுவர். அவ்வாறு உரையாடும் வாய்ப்புகள் எவ்வாறு பயன்படுத்தப்படுகின்றன என்பதில் ஒவ்வொருவருக்கும் கவனம் தேவை. நண்பர்கள் இருவர் சந்திக்கின்றனர். அவர்களின் சந்திப்பு இடைவெளிக்கு ஏற்ப அவர்களுடைய உரையாடல் தொடங்கும்.

தினந்தோறும் சந்திப்பவர்களாக இருந்தால் உரையாடல் சமீபத்தில் விட்ட இடத்திலிருந்து தொடரலாம். நீண்ட காலத்திற்கு முன் சந்தித்தவர்கள் என்று சொன்னால் அதற்கு ஏற்றபடி, நலன் விசாரிப்பிற்கு பிறகு உரையாடலானது தொடரலாம். எப்போதாவது சந்திக்கின்ற இருவரிடையே நடைபெறும் உரையாடல்எப்படிவேண்டுமானாலும்



இருக்கலாம். ஆனால் தினமும் சந்திக்க வாய்ப்புள்ள நபர்களிடையே நடைபெறுகின்ற உரையாடல் அவர்களுடைய எண்ணத்தின் ஓட்டத்தை காண்பிப்பதாக அமையும்.

நண்பர்கள் இருவரும் வேறு ஒரு நண்பரைப் பற்றி குறை சொல்லிக் கொண்டிருக்கிறார்கள் அல்லது தங்கள் நிறுவனத்தைப் பற்றி தாழ்மையான கருத்தைப் பகிர்ந்து கொண்டிருக்கிறார்கள் என்றால் அதிலிருந்து அவருடைய எண்ணங்களின் வெளிப்பாடு நமக்கு புரிந்துவிடும். இதைத் தாண்டி தொலைக்காட்சியில் தாங்கள் பார்க்கக் கூடிய தொடர்களின் அடிப்படையில்கூட உரையாடல்கள் நீளலாம். எது எப்படியிருப்பினும் இருவரிடையே நடைபெறும் உரையாடல் என்பது அவர்கள் வாழும் சமூகத்தின் பிரதிபலிப்பு என்பதை மறுக்க இயலாது.

எல்லா நேரங்களிலும் யாரோ ஒருவரைப்பற்றிய விமர்சனங்களை யாரோ இருவர் செய்து கொண்டிருந்தால் அது அவர்களுக்கும் நல்லதல்ல. அவர்களால் விமர்சிக்கப்படும் நபருக்கும் உபயோகமானதாக இருக்காது. உண்மையில் அந்த இருவருக்கும் அவர்கள் விமர்சிக்கும் நபரைப் பற்றியோ, அவரது நடவடிக்கைகளைப் பற்றியோ அக்கறை இருக்குமானால் அந்த விமர்சனத்தை அந்த நடவடிக்கைப் பற்றிய தமது கருத்துக்களை தொடர்புடைய நபரிடம்தான் தெரிவிக்கவேண்டும். அது மட்டுமே குறைபாடுகளைக் குறைக்கும்.

நோயால் பாதிக்கப்பட்டவர் மருந்து உண்பதே நோயைக் குணப்படுத்தும். மாறாக ஒருவருக்கு குறிப்பிட்ட நோய் இருக்கிறது. அவர் இந்த மருந்தை உண்டால் நல்லது என்று யாரோ இருவர் உரையாடிக்கொண்டிருப்பதில் பயனில்லை. எனவே பேசும் ஒவ்வொரு வார்த்தையின் உண்மையான பொருள் குறித்த அக்கறை உரையாடலை மேற்கொள்வோரிடம் இருக்கவேண்டும். பொருள் பொதிந்த உரையாடல்களாலேயே விரும்பத்தகுந்த சமூகமாற்றங்களும் நிகழும். சமூகத்தில் குற்றங்களை மேற்கொள்வோரிடையே அது குறித்தான அச்சத்தை விளைவிக்கும். இதனால் அவர்களைக் கடப்போரும் பயன் பெறுவர். இதனை விடுத்து உரையாடலின் நோக்கம் தனிப்பட்ட நபர்களைக் குறை சொல்வதாக அமையுமானால், உரையாடும் இருவர் ரகசியமாகப் பேசிக்கொள்ளும் அவலம்கூட நேரலாம்.

குறிப்பாக குழந்தைகள் இருக்கும்போது நிகழும் உரையாடல்கள் அறிவுபூர்வமானதாக அமைவது அவசியம். சமூகத்தில் கேள்விப்படும் வார்த்தைகளுக்கு ஏற்பவே குழந்தைகளது மனவோட்டங்கள் அமையும். அதற்கேற்பவே அவர்களது மனத்திட்பமும் அமையும். அவர்கள் எவ்வளவுக்கெவ்வளவு வாய்மை பேசும் சூழல்களில் புழங்குகின்றனரோ அவ்வளவுக்கவ்வளவே வாய்மை பேச முற்படுவர். ஆரோக்கியமான மன வளர்ச்சியும் ஏற்படும். எப்போதும் பொய் பேசிக்கொண்டிருக்க கூடிய குடும்பத்தில் வளரும் குழந்தை பொய் பேசுவதை தனது இயல்பாகக் கொள்ளும். உரையாடல்களின் தரம் மேம்பட மக்களின் எண்ணங்கள் ஆரோக்கியமானதாக அமையவேண்டும். அவர்கள் சந்திக்கும் நபர்கள் உயர்வான எண்ணங்கள் கொண்டவர்களாக அமையவேண்டும். அதற்கு ஒரே வழி அவர்களது பேசுபொருள் பொருள் பொதிந்ததாக அமைவதுதான். மலிவான எண்ணங்களின் இடத்தை வலிமையான எண்ணங்கள் அடையவேண்டும்.

மக்களின் உரையாடல்கள் பொருள் பொதிந்ததாகவேண்டுமானால் அவர்களது எண்ணவோட்டங்களில் ஆரோக்கியமான கூறுகள் மிகவேண்டும். அவ்வாறு ஆரோக்கியமான கூறுகள் மிகவேண்டுமானால் அவர்களது வாசிப்புப் பழக்கம் மேம்படவேண்டும். முன்னேறிய நாடுகளில் மக்கள் தங்களது ஓய்வு நேரத்தை வாசிப்பதில் செலவிடும் வழக்கம் உள்ளது. ரயில் நிலையம், பேருந்து நிலையம் போன்றவற்றில் புத்தகங்களை வைத்து விடுகிறார்கள். தேவைப்படுவோர் அந்த நூல்களை எடுத்துக்கொண்டு, பயணத்தின்போது வாசித்து விட்டு அடுத்த ரயில் நிலையத்திலோ, பேருந்து நிலையத்திலோ வைத்து விடலாம். தமிழகத்தில் திருநெல்வேலி நகரில் புத்தக வாசிப்புக்காக ஓர் அறை அமைக்கப்பட்டிருந்ததை நான் அங்கு சென்றபோது பார்த்தேன். இந்த முறை மற்ற நகரங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டால் மக்களிடம் வாசிப்புப் பழக்கத்தை அதிகரிப்பது எளிதாகும்.

மக்கள் தங்கள் வாழ்க்கை ஓட்டத்தில் இவை குறித்தெல்லாம் கவனம் செலுத்த இயலுமா, இது அவசியமா என்றெல்லாம் கேள்விகள் எழுவது நியாயமானதே. இயல்பாக சமூகம் இயங்கும்போது மட்டுமே நல்ல எண்ணங்களை விதைக்க இயலும். இன்று வேகமான வாழ்க்கை ஓட்டங்களுக்கு நடுவில்தான் குழந்தைகள் கடத்தல், சிறுமிகள் பாலியல் வன்கொடுமை போன்ற பல்வேறு விரும்பத்தகாத விளைவுகளும் ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றன. இவ்வாறு விரும்பத்தகாத விளைவுகளே ரகசியமாக விளையும்போது ஆரோக்கியமான விளைவுகளை பெருமிதத்துடன் விதைப்பதற்கு சமூகம் தயங்கக் கூடாது.

# தேசிய மக்கள் சக்தி இளைஞர் மாநாடு பல்லாயிரக்கணக்கானோர் பங்கேற்பு

## மாத்தறையில் நடந்தது

(அஸ்ஹர் இப்றாஹிம்)

தேசிய மக்கள் சக்தியின் இளைஞர் சங்கத்தின் மாத்தறை மாவட்ட இளைஞர் மாநாடு கடந்த ஞாயிறு நடைபெற்றது, இதில் பல்லாயிரக்கணக்கான இளைஞர்கள், யுவதிகள் கலந்து சிறப்பித்தனர்.

நாடாளுமன்றஉறுப்பினர்அனுரகுமாரதிஸாநாயக கலந்து கொண்டு சிறப்புரை வழங்கினார்.(05)









குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City

கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்

பதுளை மாவட்டம் ஹல்தமுல்லை பிரதேச செயலர் பிரிவு

15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!

சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி, கறுவா பயிர்ச்செய்கையும்

அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்

(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)

பம்பரகந்த, தியலும, துன்கிந்த, ராவணா,

ரம்போடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்

தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்

Horton Plains National Park, Hakgala Botanical Gardens

Victoria Park, Kande Ela Educational Forest Park

Lunugamvehera National Park, Yala National Park

Udawalawe National Park

கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம்,

ரம்போடை ஆஞ்சநேயர் கோவில்



தொடர்புகளுக்கு: 0777 43 5557

தனியான வாகன தரிப்பிட வசதி

முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை

தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு

மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி

உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்

தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்

சுற்றுலா ஏற்பாடுகள்

பேர்ச் 200,000/-

பரப்பு 20 இலட்சம்

5th Project

இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்

Good Gift Property Developers (Pvt) Ltd




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee
Chikne Fried Rice with
Vegetable
Kothu Rotty With Vegitable
In Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpoos Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# மட்டு. போதனா புற்றுநோய் பிரிவு கதிர்வீச்சு இயந்திரம் பழுதடைவு

## நோயாளர் நிர்வாகத்துக்கு எதிராக போராட்டம்

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை புற்றுநோய்பிரிவில்சிகிச்சைக்காகவைத்தியசாலைக்குச் சென்ற நோயாளர்கள் கதிர்வீச்சு இயந்திரம் பழுதடைந்ததால் சிகிச்சை பெறமுடியாததையடுத்துவைத்தியசாலையின் அசமந்த போக்கே காரணம் என குற்றச்சாட்டு தெரிவித்து திங்கட்கிழமை காலை வைத்தியசாலைக்கு முன்னால் ஒன்று திரண்டு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

குறித்த வைத்தியசாலையின் கதிர்வீச்சு சிகிச்சைக்காகத் திருகோணமலை, அம்பாறை மற்றும் நாட்டின் ஏனைய பகுதிகளிலிருந்து நோய்கானசிகிச்சையைப்பெறுவதற்காகஅதிகமான நோயாளர்கள் வருகின்றமை வழமை.

இந்த நிலையில் குறித்த கதிர்வீச்சு இயந்திரம் அடிக்கடி பழுதடைவதாகவும் இதனைத் திருத்தும் நபர் இங்கு இல்லாத காரணத்தால் யாழ்ப்பாணம் அல்லது கொழும்பிலிருந்து வரவேண்டியுள்ளதால் குறித்ததினத்தில்சிகிச்சையைப்பெறமுடியாமல் போகின்றது.

இதனால் பல்வேறு கஷ்டங்கள் மத்தியில் பிரயாணித்து வைத்தியசாலையைக் காலையில் சென்று அங்கு இரவு வரை காத்திருந்து சிகிச்சை பெறமுடியாமல் ஏமாறிச் செல்லவேண்டியதுடன் உரிய காலத்தில் புற்றுநோய்க்கான சிகிச்சையை பெறமுடியாததால் நோய் அதிகரித்து உயிரிழக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே குறித்த இயந்திரம் அடிக்கடி பழுதடைவதால்அதனைத்திருத்தும்ஒருவரை இங்குநியமித்திருக்கவேண்டும்அதைவிடுத்து இயந்திரம் திருத்துபவர் இரண்டு அல்லது மூன்று தினங்களின் பின்னர் வரும்வரை நோயாளர்கள் காத்திருக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே, இது தொடர்பாக வைத்தியசாலை நிர்வாகம் கவனம் கொண்டு இதற்கான தீர்வைப்பெற்றுதருமாறு நோயாளர்கள் சிறிது நேரம் போராட்டத்தில் ஈடுபட்டு எதிர்ப்பைத் தெரிவித்தனர்.

இதுதொடர்பாகவைத்தியசாலைணிப்பாளர் வைத்தியர் திருமதி கணேசலிங்கத்துடன் தொடர்புகொண்டபோது அவர் இதுதொடங்கிய காலத்தில் இதற்கான எஞ்சினியர் இருந்தார். பின்னர் அவர் இல்லாத காரணத்தால் யாழ்ப்பாணத்திற்கும் மட்டக்களப்பிற்கும் ஒரு தொழில்நுட்ப உத்தியோகத்தர் ஒருவரை அந்த கம்பனி பாவித்து வருகின்றது.

இருந்தபோதும் பழுதடைந்து நேரத்தில் இன்று அவர் இங்கு இல்லை. எனவே அவரை போல் ஒருவரை இங்கு கடமைக்கு நியமிக்குமாறு குறித்த கம்பனிக்கு கடிதம் ஒன்றைஅனுப்பியுள்ளேன். எனவேஎதிர்வரும் நாள்களில் இதற்கான தீர்வு கிடைத்துவிடும். - என்றார். (05)

# 13 நபர்களால் 14 வயதுடைய சிறுமி அ'புரவில் பாலியல் துஷ்பிரயோகம்

அநுராதபுரம்பிரதேசத்தில் உள்ள சிகை அலங்கார நிலையமொன்றில் வைத்து 14 வயது சிறுமியை பாலியல் துஷ்பிரயோகம் செய்த சம்பவம் தொடர்பில் சிறுவர் மற்றும் பெண்கள் பணியகம் விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

இந்தச்சம்பவம் தொடர்பில் இதுவரை குறித்த சிகை அலங்கார நிலையத்தின் உரிமையாளரும்மற்றுமொரு நபரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள்இருவரும் அநுராதபுரம் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் எதிர்வரும் 28 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம்உத்தரவிட்டுள்ளது.

பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பேரில் பாதிக்கப்பட்ட சிறுமியிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் இது தொடர்பான மேலதிக தகவல்கள் வெளியாகியுள்ளன.

குறித்த சிகை அலங்கார நிலையத்திற்கு பின்புறத்தில் உள்ள அறையொன்றிலேயே இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

இந்நிலையில், கைது செய்யப்பட்ட இரண்டு சந்தேக நபர்கள் உட்பட மேலும் 11 சந்தேக நபர்கள் தன்னை பாலியல் துஷ்பிரயோகம் செய்தனர் எனப் பாதிக்கப்பட்ட சிறுமி, பொலிஸாரிடம்தெரிவித்துள்ளார். சந்தேக நபர்களில் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரின் 70 வயதுடைய தந்தையும் உள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவத்துடன் தொடர்புடைய ஏனைய 11 சந்தேக நபர்களை கைது செய்வது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

இந்தசம்பவம்தொடர்பில் அநுராதபுரம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (05)

# கழுத்தறுக்கப்பட்ட காயங்களுடன் இங்கிரிய விடுதியில் இருவர் மீட்பு



இங்கிரிய பிரதேசத்தில் உள்ள விடுதியொன்றில், பெண் ஒருவரும் அவருடன் சென்ற நபரொருவரும் கழுத்தறுக்கப்பட்டு காயமடைந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இவர்கள் இருவரும் காயமடைந்த நிலையில் ஹொரணை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு காயமடைந்தவர்கள் பிலியந்தலை பிரதேசத்தை சேர்ந்த 48 வயதுடைய நபரும் பனங்கலவத்த பிரதேசத்தைசேர்ந்த 43 வயதுடைய பெண்ணுமாவர்.

தகாத உறவால் ஏற்பட்ட தகராறு காரணமாக இந்த சம்பவம் இடம்பெற்றிருக்கலாம் எனப் பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

இந்தசம்பவம்தொடர்பில்இங்கிரிய பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (05)



## பாடசாலைகளில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நவீன வகுப்பறைகளை யும தொழில்நுட்பஉபகரணங்களையும் வழங்கவும்முடிவுசெய்யப்பட்டுள்ளது.

அதன்படிகல்விச்செயற்பாடுகளை தொழில்நுட்ப முறையில் முன் னெடுப்பதற்கான உதவிகளை மைக்ரோசொப்ட் நிறுவனத்தின் குழுவொன்று வழங்கவுள்ளது.

இதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில்கைசாத்திடும்முன்பாக ஜனாதிபதிரணில்விக்ரமசிங்கவிற்கும் மைக்ரோசொப்ட் நிறுவனத்தின் பிரதிநிதிகளுக்கும் இடையிலான சந்திப்பொன்றும் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது.

இதன்போது, பாடசாலைப் பாடத்திட்டத்தில் செயற்கை நுண் ணறிவை உள்வாங்குவதற்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்குவதாக ஜனாதிபதியிடம், மைக்ரோசொப்ட் பிரதிநிதிகள் உறுதியளித்தனர்.

மைக்ரோசொப்ட் நிறுவனத்தின் இந்தியாமற்றும்தெற்காசியபிராந்திய தலைவர் புனித் சந்தோக் புதிய தொழில்நுட்பத்துடன்கூடியசெயற்கை நுண்ணறிவை இலங்கையில் அறிமுகப்படுத்துவதற்கு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க வழங்கும் ஆதரவிற்கும் வழிகாட்டலுக்கும் பாராட்டு தெரிவித்தார்.

இந்த வேலைத் திட்டத்தை 2025ஆம் ஆண்டிலிருந்து முழுமையாக நடைமுறைப்படுத்த எதிர்பார்க்கப்படுவதாககல்விஅமைச்சர் சுசில்பிரேம்ஜயந்தசுட்டிக்காட்டினார்.

இந்நிகழ்வில்கலந்துகொண்டிருந்த இலங்கைக்கான அமெரிக்கதூதுவர் ஜூலி சாங், இலங்கை மக்களுக்கு இது ஒரு சிறந்த சந்தர்ப்பம் என்றும் அதனால்,அனைவரும்முழுமையான பயனடைய வேண்டியது அவசிய மெனவும் வலியுறுத்தினார்.

இலங்கை மக்கள் மற்றும் பாடசாலைமாணவர்களின்ஆங்கில மொழித்திறனைமேம்படுத்துவதற்கு சுயாதீனக் குழுக்களின் ஆதரவைப் பெற்றுத்தருவதாகவும் அவர் தெரிவித்தார்.

தொழில்நுட்பஇராஜாங்கஅமைச்சர் கனக ஹேரத், தேசிய பாதுகாப்பு தொடர்பானஜனாதிபதியின்சிரேஷ்ட ஆலோசகரும்ஜனாதிபதிபணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, கல்வி அமைச்சின் செயலாளர் வசந்த பெரேரா, தொழில்நுட்ப அமைச்சின் செயலாளர் தர்மசிறி குமாரதுங்கமற்றும்மைக்ரோசொப்ட் நிறுவனத்தின் சிரேஷ்ட அதிகாரிகள் குழு, கொழும்பு டி.எஸ் சேனநாயக்க கல்லூரி, முஸ்லிம் பெண்கள் பாடசாலை, புஸ்ஸல்லாவ இந்து தேசியபாடசாலை,தங்கல்லபெண்கள் கல்லூரி, கொழும்பு இந்துக் கல்லூரி ஆகிய பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

## கோப் குழுவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்றஉறுப்பினர்களான தயாசிறிஜயசேகர, இராசமாணிக்கம் சாணக்கியன், கலாநிதி சரித்த ஹேரத், எஸ்.எம்.மரிக்கார், காமினிவலேகொட, ஹேஷா விதானகே ஆகியோரே நேற்றுத் தமது பதவிகளில் இருந்து விலகினர்.

முன்னதாக, நேற்றுமுன்தினம் நாடாளுமன்ற உறுப்பினர் எரான் விக்ரமரத்ன முதன்முதலாக தனது பதவியிலிருந்து விலகியிருந்தார்.

## மேலும் 200...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாட்டின் 41 இலட்சம் பாடசாலை மாணவர்களின்நலனைகருதியேஇது சம்பந்தமாக கேள்வி எழுப்புகிறேன். வரப் பிரசாதங்களுக்குட்பட்டு தான் பொய்யான விடயங்களை முன்வைக்கவில்லை. சொல்வதை பொறுப்புடன் சொல்கிறேன்.

இந்த சட்டவிரோத உரிமப் பத்திரங்கள்அனைத்தும்ஐக்கியமக்கள் சக்தி ஆட்சியில் திரும்பப் பெறப்படும். இதுதொடர்பானவிரிவானவிசாரணை தேவைஎன்றும்எதிர்க்கட்சித்தலைவர் வலியுறுத்தினார்.




## மாகாண....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் சபையில் உரையாற்றுகிறாரா அல்லது பிரதேச சபையில் உரையாற்றுகிறாரா என்பதை அறியவில்லை. உயர் நீதிமன்றத்தின் தீர்மானத்தை சுட்டிக்காட்டி உரையாற்றினார். அவரது உரையில் விரக்தி மாத்திரமே எதிரொலித்தது.

அரசமைப்பின் 21ஆவது திருத்தம் தொடர்பில் இவர் சபையில் உரையாற்றுகையில் 'உயர்நீதிமன்றம் வீட்டுக்கு செல்ல வேண்டும்' என்று இவர் குறிப்பிட்டார். இவர்களுக்கு சார்பான தீர்ப்பு கிடைக்கும்போது சபைக்கு வந்து உயர்நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு அப்பாற்பட்டு செல்லகூடாது என்று குறிப்பிடுகிறார். ஏன் இந்த இரட்டை நிலைப்பாடு?

இதன்போது எழுந்து ஒழுங்கு பிரச்சினையை எழுப்பிய தமிழ்த் தேசியகூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் 'உயர் நீதிமன்றத்தின் குறை நிறைகளைச் சுட்டிக்காட்டும் உரிமை எமக்கு உண்டு. அன்று குறிப்பிட்ட விடயத்துக்கும், இன்று குறிப்பிடும் விடயத்துக்கும் இடையில் பரஸ்பர வேறுபாடுகள் உண்டு. நான் அன்று குறிப்பிட்ட கருத்தில் எவ்வித மாறுப்பாடும் கிடையாது" என்றார்.

தொடர்ந்து உரையாற்றிய நீதியமைச்சர் தெரிவித்ததாவது; மாகாண சபைத் தேர்தல் முறைமை திருத்தம் தொடர்பில் உயர் நீதிமன்றம் முன்வைத்த திருத்தங்கள் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்படவில்லை. சிறந்த சட்ட வரைபை நாங்கள் தயார் செய்து முன்வைத்தோம். உயர் நீதிமன்றத்தின் திருத்தங்கள் சட்டத்தில் உள்வாங்கப்படவில்லை. நல்லாட்சிக் காலத்தில் இந்த செயற்பாடுகளுக்கு நான் எதிர்ப்பு தெரிவித்தேன்.

மாகாணசபைத்தேர்தல் முறைமை திருத்தம் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் அப்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு அழுத்தம் பிரயோகித்தார். இதனால் மாகாண சபைத் தேர்தல் பிற்போடப்பட்டு மக்களின் வாக்குரிமை பறிக்கப்பட்டது. இதற்கு எம்.ஏ.சுமந்திரன் பொறுப்புக் கூறவேண்டும். ஆகவே நீங்கள்தான் (சுமந்திரனை நோக்கி) நீங்கள்தான் அப்போதைய பிரதமருக்குக் கடும் அழுத்தம் பிரயோகித்தீர்கள் -என்றார்.

இதன்போது மீண்டும் குறுக்கிட்டு உரையாற்றிய எம்.ஏ.சுமந்திரன் "நான் எதிர்க்கட்சி உறுப்பினர் நீங்கள்தான் அமைச்சரவை உறுப்பினர் ஆகவே நீங்களே பொறுப்புக் கூறவேண்டும்" என்றார்.

''நான் அமைச்சரவையில் இருந்தேன். சிறந்த சட்டமூலத்தையே நாடாளுமன்றத்துக்குச் சமர்ப்பித்தோம். சட்டமூலம் குழுநிலை வேளையில் திருத்தம் செய்யப்பட்டபோது உயர் நீதிமன்றத்தின் தீர்மானங்கள் கவனத்திற் கொள்ளப்படவில்லை. இவர்களின் தேவைகளுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டதால் மாகாண சபைத் தேர்தல் காலவரையறையின்றி பிற்போடப்பட்டுள்ளது. மாகாண சபைத் தேர்தலை நடத்த முடியாது. சிக்கலை நீங்களே (சுமந்திரனை நோக்கி) ஏற்படுத்தினீர்கள்" என்றார்.

# கோப் குழு தலைவர் நியமனம் மூலம் நாடாளுமன்றம் மலினப்படுத்தப்பட்டது

## *நளின் பண்டார எம்.பி. சீற்றம்*

கோப் குழுவின் தலைவராக ரோஹித்த அபேகுணவர்த்தனவை நியமித்து நாடாளுமன்றத்தை மலினப்படுத்திவிட்டது ஆளும்தரப்பு என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்தார். தவறை உடன் திருத்தவேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற அமர்வில் உரையாற்றுகையில் அவர் இதனைத் குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

கோப்குழுவின் உறுப்பினர் என்ற வகையில் இந்த வலியுறுத்தலை ஆளும்தரப்பிடம் முன்வைக்கிறேன். நாடாளுமன்ற குழுக்களில் கோப் குழு முக்கியமானது. கோப் குழு வின் தலைவர் கணக்காளர் நாயகத்துடன் ஒன்றிணைந்து செயற்படவேண்டும். கோப்குழுவின் தலைவராக ஆளும் தரப்பினர் ரோஹித்த அபேகுணவர்தன நியமிக்கப்பட்டுள்ளமைக்கு பலர் எதிர்ப்புத் தெரிவித்தார்கள். கோப குழுவின் உறுப்பினர் பதவியில் இருந்து எரான் விக்கிரமரத்ன விலகியுள்ளார்.

கோப் குழுவின் தலைவர் நியமனத்தில் இவ்வாறான முரண்பாடுகள் காணப்படுகின்ற நிலையில் அதிகாரிகள் எவ்வாறு குழுவில் முன்னிலையாகுவார்கள். கோப்குழுவின் தலைவராக ரோஹித்த அபேகுணவர்தனவை நியமித்து நாடாளுமன்றத்தை மலினப்படுத்தும் செயற்பாடுகளை ஆளும் தரப்பு முன்னெடுத்துள்ளது.

தவறைத் திருத்திக் கொள்ள வேண்டும். ஆகவே ரோஹித்த அபேகுணவர்தனை தலைவர் பதவியிலிருந்து நீக்கி நாடாளுமன்ற சம்பிரதாயங்களுக்கு அமைய கோப்குழுவின் தலைவர் பதவியை எதிர்க்கட்சிக்கு வழங்கவேண்டும் என்று வலியுறுத்துகிறேன் என்றார்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு

076 3983858

மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com



# இளைஞர்களிடம் தலைமைத்துவத்தை விளையாட்டின் மூலம் உருவாக்கலாம்

## அமைப்பாளர் ஏகே அமீர் வலியுறுத்து



(கே எ ஹமீட்)

விளையாட்டின் மூலம் இளைஞர்களின் தலைமைத்துவ பண்புகள் அதிகரிக்கும். அதன் மூலம் நமது சமூகத்தில் பெரும் தலைவர்களாக அவர்கள் உருவாகுவார்கள் என அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் அட்டாளைச்சேனை அமைப்பாளர் அல் ஹாஜ் ஏ கே அமீர் தெரிவித்தார்.

அட்டாளைச்சேனை அந் நூர் மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டியின் இறுதி நிகழ்வில் விசேட அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இதனை அவர் தெரிவித்தார்.

தொடர்ந்து ஏகே அமீர் உரையாற்றும் போது, பாடசாலைகள் கல்வியோடு விளையாட்டையும் சமாந்திரமாகக் கொண்டு செல்ல வேண்டும். தலைநகரில் உள்ள பெரும் பாடசாலைகள் அதிகமான முக்கியத்துவத்தை விளையாட்டுக்கு வழங்குகின்றன.

கல்வியையும் விளையாட்டையும் சிறப்பாக பெற்றவர்கள் தொழில் வாய்ப்போடு சமூக அங்கீகாரத்தையும் இலகுவாகப் பெற்றுவிடுகின்றனர்.

ஒரு விளையாட்டு வீரன் உடல் ஆரோக்கியத்தை தாண்டி சமூக தொடர்பாடலை அதிகமாக கொண்டுள்ளான். உலகத்தில் விளையாட்டு வீரனுக்கு உள்ள அங்கீகாரம் வேற எந்த துறைகளுக்கும் அவ்வளவாக இல்லை.

அந்நூர் பாடசாலை தொடர்ச்சியாக விளையாட்டு போட்டிகளை நடத்த வேண்டும். இங்கு நடைபெறும் போட்டி பழைய மாணவர்கள், அபிவிருத்தி குழு உறுப்பினர்கள், அதிபர், ஆசிரியர்கள், நலன் விரும்பிகள் என எல்லோருடைய அர்ப்பணிப்புடனும் பங்கு பற்றுதலுடனும் நடைபெறுவது பெரும் சந்தோசமாகும் என மேலும் தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து பாடசாலை சமூகத்தால் அமைப்பாளர் ஏ.கே. அமீர் சமூகத்திற்கு ஆற்றும் சேவையைப் பாராட்டி கௌரவிக்கப்பட்டார். (05)

# பௌத்த இளம் பிக்கு ஒருவர் நீர்த்தேக்கத்தில் மூழ்கி சாவு

தப்போவ நீர்த்தேக்கத்தில் மூழ்கி இளம்பிக்கு ஒருவர் உயிரிழந்துள்ளார்.

வனாத்தவில்லுவ ஸ்ரீதர்மராஜா விகாரைக்கு விஜயம் செய்திருந்த போது, விகாரையில் இருந்த பிக்குகள் குழுவுடன் நீராடச் சென்ற போதே இந்த அனர்த்தம் நிகழ்ந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் உயிரிழந்தவர் ரஜரட்ட பிக்கு பல்கலைக்கழகத்தில் கல்வி கற்று வந்த ஹீல்ஒய சங்கானந்த தேரர் எனத் தெரியவந்துள்ளது.

பிக்குவின் சடலம் தொடர்பான பிரேத பரிசோதனை நேற்று (செவ்வாய்க் கிழமை) நடைபெற்றதுடன், சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கருவலகஸ்வெள பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# மன்னார் பனங்காட்டுக்குள் தீ வீடு முற்றாக எரிந்து சாம்பர்





மன்னார் பொலிஸ் நிலையப் பகுதியில் காடு திடீரென தீப்பற்றி எரிந்தமையால் பரந்தளவு பனங்காடு சேதமடைந்ததுடன் ஒரு வீடும் முற்றாக தீக்கு இரையாகியுள்ளது.

இச்சம்பவம் மன்னார் நகர் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட பட்டித்தோட்டம் பகுதியில் திங்கட்கிழமை மாலை நான்கு மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இச் சம்பவம் தொடர்பாக தெரியவருவதாவது -

திங்கட்கிழமை மாலை மன்னார் பட்டித்தோட்டம் பகுதியில் பனங்காடு ஒரு பகுதியில் திடீரென தீப்பற்றி எரிந்ததும் சம்பவ இடத்துக்குக்கு விரைந்த பொது மக்கள், அருகிலிருந்த கடற்படையினர் மற்றும் மன்னார் நகர் பிரதேச செயலாளர் எம்.பிரதீபன், மன்னார் அனர்த்த முகாமைத்துவ பணிப்பாளர் தீபன், மன்னார் நகர சபை செயலாளர் ஆகியோர் தீ காட்டுக்குள்ளும் கிராமப் பகுதிக்குள்ளும் பரவாதிருக்க தீவிர முயற்சிகளை மேற்கொண்டனர்.

மன்னார் நகர சபையின் தீயணைக்கும் படையினர் குறிப்பிட்ட நேரத்துக்குள் சம்பவ இடத்துக்கு வருகை தந்து செயற்பட்டமையால் தீ பெரும் சேதத்தை உருவாக்காதிருப்பதற்கான நடவடிக்கையில் செயற்பட்டனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இருந்தபோதும் காட்டுப் பகுதிக்கு அருகில் இருந்த ஓர் ஓலை வீடு முற்றாக எரிந்து பல லட்சம் ரூபா சேதத்தை ஏற்படுத்தியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இக்காட்டுத் தீ எவ்வாறு உருவாகியது என்பது இன்னும் கண்டுப் பிடிக்கவில்லை எனவும் தெரிவிக் கப்பட்டுள்ளது. இது தொடர்பாக மன்னார் பொலிஸார் தீவிர விசாரணையில் ஈடுபட்டுள்ளனர். (05)

# சமுர்த்திப் பணிப்பாளராக அம்பாறையில் சாபீர் நியமனம்

*(அபு அலா)*

*அம்பாறை மாவட்ட சமுர்த்தி பணிப்பாளராக அட்டாளைச்சேனை பிரதேச செயலக முன்னாள் செயலாளர் எம்.ஏ.சி.அகமட் ஸாபீர் நேற்று (செவ்வாய்க்கிழமை) கடமையேற்றுள்ளார்.*

*இந்நிகழ்வில், அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர், உள்ளிட்ட உயரதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர்.*

*(05)*

# கழுத்தறுக்கப்பட்டு பெண் மொரட்டுவையில் கொலை

மொரட்டுவை பிரதேசத்தில் பெண் ஒருவர் கழுத்தறுக்கப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளார். 50 வயதுடைய பெண் ஒருவரே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் மொரட்டுமுல்ல பொலிஸ் நிலையத்தில் சரணடைந்துள்ளார் எனத்தெரிய வந்துள்ளது.

உயிரிழந்த பெண்ணின் கணவர், கடந்த சில மாதங்களுக்கு முன்னர் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தபோது சந்தேகத்திற்கிடமான முறையில் உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்த கணவரின் உறவினர் ஒருவரால் இந்தக் கொலை இடம்பெற்றிருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.(05)

# புனித ரமழானை சிறப்பிப்பதற்காக சுவனச்சோலை கேள்வி பதில் போட்டி

(தில்சாத் பர்வீஸ்)

புனித ரமழானை சிறப்பிக்கும் முகமாக ஐந்தாவது வருடமாக ஆர் ஜே மீடியா பெருமையுடன் வழங்கும் ரமழான் சுவனச்சோலை கேள்வி பதில் போட்டி இம்முறையும் ஆர் ஜே மீடியா கலை கலாசார ஊடக வலையமைப்பு ஒவ்வொரு வருடமும் ரமழானை சிறப்பிக்கும் முகமாக பெருமையுடன் மாலை 05.30முதல் ஆர் ஜே மீடியா உத்தியோகபூர்வ முகநூல் மற்றும் யூடியூப் பக்கங்களில் வழங்கும் தேசிய ரீதியிலான சுவனச்சோலை கேள்வி பதில் போட்டி நிகழ்ச்சி ஐந்தாவது முறையாகவும் ஆர் ஜே மீடியாவின் ஏற்பாட்டில் மிகவும் சிறப்பான முறையில் இடம்பெற்று வருகின்றது. இதில் நாடளாவிய ரீதியில் பல நூற்றுக்கணக்கான போட்டியாளர்கள் இம்முறையும் போட்டியில் கலந்து கொள்வது சிறப்பம்சமாகும்.

இம்முறை போட்டி நிகழ்ச்சியில் தேசிய ரீதியில் பதினைந்து வெற்றியாளர்கள் தெரிவு செய்யப்பட உள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

(05)

# கல்முனை சந்தான ஈஸ்வரராலய பிரம்மோற்சவ தேர்த் திருவிழா




(வி.ரி.சகாதேவராஜா)

வரலாற்று பிரசித்திப் பெற்ற கல்முனை நகர் அருள் வளர் கௌரி அம்பிகை உடனுறை சந்தானஈஸ்வரர் தேவஸ்தானத்தின் பிரமோற்சவ திருவிழா கடந்த 14 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

தொடர்ந்து பத்து நாள்கள் திருவிழா இடம்பெற்று பிரம்மோற்சவ தேர்த் திருவிழா எதிர்வரும் 24 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிரமாண்டமாக நகர் வலம் வர இருக்கின்றது.

அதேபோல மறுநாள் 25 ஆம் திகதி திங்கட்கிழமை தீர்த்தோற்சவம் இடம்பெறும்.

கிரியைகள் யாவும் ஆலய பிரதம குரு இருக்குவேத உபாசகர் வாமதேவ சிவாச்சாரியார் சிவஸ்ரீ சீ. குககணேசக் குருக்கள் தலைமையில் நடைபெற இருக்கின்றது என ஆலய தலைவர் வேலாயுதபிள்ளை செவ்வேள் ஆசிரியர் தெரிவித்தார். (05)

# ஆளுநர் செந்தில் தொண்டமானால் திருக்கோவிலில் 100 குடும்பங்களுக்கு காணி பத்திரங்கள் வழங்கல்



அம்பாறை திருக்கோவில் பிரதேசத்தில் ஜனாதிபதியின் உறுமய காணி வழங்கும் நிகழ்ச்சி திட்டத்தின் கீழ் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானால் நூறு குடும்பங்களுக்கு உறுமய காணி அளிப்பு பத்திரங்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

இந்நிகழ்வு திருக்கோவில் பிரதேச செயலாளர் தங்கையா கஜேந்திரனின் ஒழுங்கமைப்பில் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் தலைமையில் திங்கட்கிழமை திருக்கோவில் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற நிகழ்வின் போது வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

இதன்போது திருக்கோவில் பிரதேசத்தில் மிக நீண்டகாலமாக காணி அளிப்பு பத்திரங்களைப் பெற்றுக் கொள்ள முடியாது இருந்த சுமார் 100 குடும்பங்களுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் உறுமய காணி வழங்கும் நிகழ்ச்சித் திட்டத்தின் ஊடாக இந்தக் காணி அளிப்பு பத்திரங்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

இந்நிகழ்வில் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன், திருக்கோவில் பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலாளர், கணக்காளர், மாவட்ட பிரதேச காணிப் பிரிவு உத்தியோகத்தர்கள் ஆளுநரின் செயலாளர், திருக்கோவில் பிரதேச சபை செயலாளர் மற்றும் பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.(05)

# ஒன்பது நாள்களாக மூடிக் கிடக்கும் திருக்கோவில் ஆதார வைத்தியசாலை

## ஆளுநர் தலைமையில் திருமலையில் கூட்டம்.




(வி.ரி. சகாதேவராஜா)

கடந்த ஒன்பது நாள்களாக திருக்கோவில் ஆதார வைத்தியசாலை வைத்தியர்களின் பணிப்பகிஸ்கரிப்பால் மூடிக்கிடக்கின்றது.

இதனால் அந்த பிரதேசங்களைச் சேர்ந்த சுமார் 32 ஆயிரம் தமிழ்மக்கள் வைத்திய சேவையின்றி பாதிக்கப்பட்டுள்ளார்கள் .

அவசர சிகிச்சைகளுக்காக அப்பிரதேச மக்கள் காலநேரபணம் செலவுசெய்து அக்கரைப்பற்று வைத்திய சாலைக்கு செல்லவேண்டிய துர்பாக்கிய நிலையில் உள்ளனர்.

இது தொடர்பாக திருக்கோவில் ஆதார வைத்தியசாலை வைத்திய அத்தியட்சகர் டாக்டர் மர்சூத்திடம் தொடர்பு கொண்டு நிலைமையைக் கேட்டபோது -

வைத்தியசாலை செயற்பாடுகள் இன்னும் வழமைக்கு திரும்பவில்லை. கிழக்கு மாகாண சுகாதார அமைச்சு செயலாளர், கிழக்கு மாகாண பணிப்பாளர், பிராந்திய சுகாதார சேவை பணிப்பாளர் உள்ளிட்ட குழுவினரின் கலந்துரையாடல் கூட்டம் இன்று நடைபெறவிருக்கிறது. அதன்பின்னர் முடிவுகள் தெரியவரும். - என்றார்.

இதேவேளை, திங்கட்கிழமை திருக்கோவில் பிரதேசசெயலகத்திற்கு காணி உரிமைப் பத்திரங்கள் வழங்கும் நிகழ்வுக்கு வருகை தந்த கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானிடம் வைத்தியசாலை அபிவிருத்தி குழுவினரும் பிரதேச செயலாளரும் வைத்தியசாலை மூடப்பட்டு கிடப்பது தொடர்பாகவும் அது திறக்கப்பட வேண்டியதன் அவசியம் தொடர்பாகவும் தெரிவித்தார்கள்.

அதற்கு, அவர் இன்று (புதன்கிழமை) திருகோணமலையில் கூட்டம் இடம்பெறும். அதில் நாடாளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன் தொடக்கம் சம்பந்தப்பட்ட சகலரையும் அழைத்துள்ளார்.

அதன்படி இன்று(புதன்கிழமை) திருமலையில் நடைபெறும் இறுதி கட்ட கூட்டத்திற்கு பிற்பாடு வைத்தியசாலை திறப்பு தொடர்பாக அறிவிக்கப்படும் என்று தெரிய வருகிறது.

இது இவ்வாறிருக்க, ஒரு வாரத்துக்கு முன்பு மரதன் ஓடிய ஒரு மாணவனின் இறப்பைத் தொடர்ந்து அங்கு வைத்தியசாலை முன்பாக ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டதும் அதன் போது வைத்தியசாலை கண்ணாடிகள் பெயர் பலகைகள் உடைக்கப்பட்டதும் தெரிந்ததே.

இதனை அடுத்து தங்களுக்கு பாதுகாப்பின்மை என்று கூறி வைத்தியர்கள் வெளியேறினார்கள்.

அதனால் அன்றிலிருந்து நேற்று(செவ்வாய்க்கிழமை) வரை ஒன்பது நாள்களாக வைத்தியசாலை மூடப்பட்டுள்ளது. அங்கே எவ்விதமான வைத்திய சேவைகளும் இடம் பெறவில்லை.

இந்த குறிப்பிட்ட காலப்பகுதியில் பாம்புக்கடி, தூக்கிட்டு தற்கொலை முயற்சி போன்ற பல நோயாளிகள் வந்தும் அவர்கள் நேரடியாக அக்கரைப்பற்று ஆதரவைத்தியசாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டிருந்தது.

இவ்வேளையில் வைத்தியசாலை மீள திறக்கப்பட வேண்டும். பொதுமக்கள் எவ்விதத்திலும் பாதிக்கப்படக்கூடாது என்ற நோக்கில் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தவராஜா கலையரசன், வைத்தியசாலை அபிவிருத்தி குழுவினர், பிரதேச செயலாளர் உள்ளிட்ட பல பொது அமைப்புகள் உரிய தரப்பினருடன் கலந்துரையாடி வருகின்றனர்.

நாடாளுமன்ற உறுப்பினர் தவராஜா கலையரசன் தெரிவிக்கையில் -

தான்மறுநாளே அங்கு பயணித்து வைத்திய அத்தியட்சகர் ஐ பாலீஸார் மற்றும் பிராந்திய சுகாதார சேவை பணிப்பாளர் ஆகியோரோடு தொடர்பு கொண்டுநிலைமையைத்தணிக்கமுயற்சித்ததாகவும் வைத்திய சாலையை மீளத்திறக்க முயற்சிகளை மேற்கொண்டதாகவும் தெரிவித்தார்.

பின்பு பொலீஸாரின் பாதுகாப்புக் கோரி சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகருடன் பேசி வைத்தியசாலை பாதுகாப்பிற்கு பொலிஸாரை அமர்த்த நடவடிக்கை எடுத்ததாகவும் குறிப்பிட்டார்.

இதேவேளை இன்றைய கூட்டத்திலும் கலந்து கொள்ளவிருக்கிறார்.



இதேவேளை அரச வைத்தியர்கள் சங்கம் தங்களுக்குப் பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து அவர்கள் பணிப்பகிஸ்கரிப்பில் ஈடுபட்டு வருகின்றமை தெரிந்ததே.

மாணவனின் மரணம் மற்றும் ஆர்ப்பாட்டம் தொடர்பாக திருக்கோவில் பொலீஸார் வலயக்கல்வி அலுவலகம் மற்றும் வைத்தியசாலை வட்டாரங்கள் விசாரணைகளை முடுக்கி விட்டுள்ளனர்.

இருந்தபோதிலும் கடந்த ஒன்பது நாள்களாக வைத்திய சேவை முற்றாக பாதிக்கப்பட்டுள்ளது.

எது எப்படி இருப்பினும் இன்றைய தினம்(புதன்கிழமை) ஒரு முழுமையான கலந்துரையாடல் ஆளுநர் செந்தில் தொண்டமான் முன்னிலையில் திருமலையில் இடம்பெறும் கூட்டத்தின்போது வைத்தியசாலை திறக்கப்படுவதற்கான சாதகமான அறிகுறி தென்படுமென்று நாடாளுமன்ற உறுப்பினர் தவராஜா கலையரசன் அறிவித்தார்.

முதலில் வைத்திய சாலையைத் திறந்து பொது மக்களுக்கு அத்தியாவசிய சுகாதார சேவையை வழங்குங்கள். பிறகு உங்கள் விசாரணகளை நடாத்துங்கள். குற்றப்பட்டவர்களை நீதியின் முன் நிறுத்துங்கள். தேவையில்லாதோர் என்று இனம் கண்டால் இடம் மாற்றுங்கள்.

எதற்கும் முதலில் வைத்திய சாலையை திறந்து இயக்கச் செய்யுங்கள் என்று பொது அமைப்புகள் வேண்டுகோள் விடுத்துள்ளன.(05)

# பல்துறைகளிலும் பிரகாசிக்கும் எழுத்தாளர் யூ.எல்.ஏ.மஜீத்

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

சாய்ந்தமருது பிரதேசத்தில் எழுத்தாளர் என அழைக்கப்படும் யூ.எல்.ஏ. மஜீத் மாளிகைக்காடு என்னும் கிராமத்தில் உதுமாலெப்பை



ஆமினா தம்பதியினருக்கு ஐந்தாவது மகனாக 1955.09.11 இல் பிறந்தார்.

தனது ஆரம்பக் கல்வியை சாய்ந்தமருது மல்ஹருஸ் ஸம்ஸ் பாடசாலையிலும் கல்முனை சாஹிரா தேசிய பாடசாலையிலும் தரம் 10 வரை பயின்றார். தொடர்ந்தும் கல்வியைத் தொடர்வதற்கு குடும்பத்தில் நிலவிய பொருளாதாரப் பிரச்சினை தடையாக காணப்பட்டதினால் ஆண்டு பத்தோடு கல்வியை நிறுத்திக் கொண்டதுடன் தனது ஆரம்ப காலங்களில் இருந்து இலக்கியம், வாசிப்பு போன்றவற்றில் ஆர்வம் உடையவராகவிளங்கியதுடன், பாடசாலைப் படிப்போடு தனது மார்க்கக் கல்வியையும் சீனி ஆலிம் மத்ரசாவில் கற்றுக் கொண்டார்.

முதன்முதலாக தனது இலக்கியப் பணியை வானொலி சேவையில் ஆரம்பம் செய்தார். தென்றல், வர்த்தக சேவை, சக்தி போன்ற வானொலி நிகழ்ச்சியில் பங்குபற்றி சிறப்பிக்கலானார். அத்துடன் 1991 இல் நடத்தப்பட்ட ஈரான் இஸ்லாமியக் குடியரசின் பன்னிரெண்டாவது நிறைவையொட்டி நடத்தப்பட்ட கட்டுரைப் போட்டியில் கலந்து கொண்டு முதலாம் இடத்தை தட்டிக் கொண்டார். ஆரம்ப காலத்தில் வணிகத் தொழிலில் ஈடுபட்டதுடன் 1995இல் ஆயுர்வேத வைத்திய துறைக்குள் பிரவேசிக்கலானார். இத்துறையில் அன்று தொட்டு இன்று வரையும் சிறப்பாகப் பங்காற்றி வருவதுடன் 2004 இல் எழுத்துத் துறைக்குள் காலடி வைத்தார். இந்து சமுத்திரத்தை அதிரவைத்த சுனாமி பேரலை மற்றும் சுதந்திரத்துக்கு பின் இலங்கை என்ற தலைப்பின் கீழான கட்டுரைகள் மூலம் வீரகேசரி களம் அமைத்துக்கொடுத்தது. அதன்பயனாக கடந்த 19 வருட காலமாக வீரகேசரி, தின முரசு, தினகரன், தினக்குரல், சுடர் ஒளி, நவமணி, விடிவெள்ளி, தமிழ் மிரர், தமிழன் போன்ற பத்திரிகைகளுக்கு அரசியல் கட்டுரை உட்பட ஆய்வுக் கட்டுரை, சிறுகதை, கவிதை, ஆலமுல் இஸ்லாம், பிறைப் பூக்கள், கருத்துக்களம், வணிகத்துறை போன்றவற்றுக்குப் பல நூற்றுக்கணக்கான ஆக்கங்கள் எழுதலானார்.

அமைதியானவராக விளங்கும் மஜீத், பிரதேசத்தில் மக்களின் அபிமானத்தைப் பெற்றவராகவும் அனைவரையும் அரவணைத்து உதவி ஒத்தாசை வழங்கி வருவதுடன், சிங்கள மொழியிலும் தமிழ் மொழியிலும் தேர்ச்சி பெற்ற ஒருவராக மட்டக்களப்பு மாவட்டத்தில் காத்தான்குடி பிரதேசத்தில் பத்து வருடங்களுக்கு மேலாக தனது ஆயுர்வேத வைத்திய சேவையைச் சிறப்பாக செய்த மஜீத், 1994 முதல் 2004 வரை தமிழ் முஸ்லிம் சமாதான ஒன்றியத்தின் மேற்பார்வையாளராகவும் செயலாளராகவும் சிறப்பாகக் கடமையாக்கினார்.

இவரது ஆக்கங்கள் இடம்பெறாத பத்திரிகைகள் எதுவுமே இல்லை என்று காட்டும் அளவுக்கு அனைத்து பத்திரிகைகளுக்கும் எழுதலானார். இவரை எழுத்துத் துறையின் ஜாம்பவான் என்று கூடக் கூறலாம். இலக்கியத்துறைக்கு இவர் ஆற்றிய சேவையைப் பாராட்டி கலாசார திணைக்களத்தால் 2018, 2020 களில் கலைஞர் சுவாதம், வித்தகர் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

தொடர்ந்தும் பல்துறைகளிலும் பிரகாசிக்கும் இவர், சாய்ந்தமருது பிரதேசத்தில் லைலத்துமா எனும் பெண்மணியைக் கரம் பிடித்ததுடன் நௌஷாத், நஸீலா எனும் இரு பிள்ளைகளின் தந்தையாகவும் சிறந்த குடும்பத் தலைவனாகவும் சிறந்த ஆளுமையுடையவராகவும் அனைவரினாளும் கவரப்பட்ட ஒரு தூர நோக்குடையவராகவும் பொதுத்தொண்டு செய்வதில் ஆர்வம் உடையவராகவும் மதப்பற்று உடையவராகவும் காணப்படும் மஜித், தொடர்ந்தும் இப்பணியில் ஈடுபட சக்தி, பலம், ஆரோக்கியம் பெற்று நீடுழி காலம் வாழ நாமும் பிரார்த்திப்போம். (05)

# புதுக்குடியிருப்பில் மகளிர்தின நிகழ்வு





யாழ். இந்தியத் துணைத் தூதரகம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பால்நிலை ஒப்புரவு மற்றும் சமத்துவத்துக்கான நிலையம் முல்லைத்தீவு மாவட்ட செயலகம் புதுக்குடியிருப்பு பிரதேச செயலகம் மற்றும் இலங்கை ஏதிலிகள் புனர்வாழ்வு நிறுவனம் ஆகிய இணைந்து நடத்தும் சர்வதேச மகளிர் தின விழா புதுக்குடியிருப்பு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் சிறப்பாக இடம்பெற்று வருகிறது.

முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் அ.உமாமகேஸ்வரன் அவர்களது தலைமையில் இடம்பெற்றுவரும் குறித்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர் சி.சிறிசற்குணராசாவும் கௌரவ விருந்தினர்களாக இந்திய துணைத்தூதுவர் சி.சாய்முரளி, முல்லைத்தீவு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சி.குணபாலன், பேராசிரியர்கள், உயர்நிலை அதிகாரிகள், பிரதேச செயலாளர்கள், பிரதேச சபை செயலாளர்கள் மற்றும் பல்வேறு சாதனைப்பெண்கள் என பலர் கலந்து கொண்னர்

பாரம்பரிய கலை அம்சங்களுடன் விருந்தினர் வரவேற்கப்பட்டதை தொடர்ந்து புதுக்குடியிருப்பு தொழில் முயற்சியாளர்களது விற்பனை சந்தை திறந்து வைக்கப்பட்டதை தொடர்ந்து

இந்நிகழ்வில் அதிதிகள் உரைகளும் கலை நிகழ்வுகளும் சாதனைப் பெண்களுக்கான கௌரவிப்பு நிகழ்வும் இடம்பெறவுள்ளன. (05)

# யாழ். பல்கலைக்கழக ஊழியர்கள் நேற்றுக் கவனவீர்ப்புப் போராட்டம்



யாழ்ப்பாண பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தினால் நேற்று பல்கலைக்கழகத்தில் கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

அனைத்துப் பல்கலைக்கழக தொழிற்சங்க கூட்டமைப்பின் 11.03.2024 மற்றும் 18.03.2024 திகதியிடப்பட்ட பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவருக்கு வழங்கப்பட்ட கடிதங்களின் பிரகாரம் நேற்று முழுநாளும் அனைத்துப் பல்கலைக் கழகங்களிலும் பல்கலைக்கழக கல்விசாரா பணியாளர்களின் சம்பள முரண்பாடு, சம்பள அதிகரிப்பு மற்றும் அவர்களைப் பாதிக்கும் பிரச்சினைகளுக்கு உரிய கால அவகாசங்கள் வழங்கப்பட்டும், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவும் அரசாங்கமும் இதுவரை தீர்வை வழங்காதமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் உடனடித் தீர்வை வேண்டியும் ஒரு நாள் அடையாள வேலைநிறுத்தத்தில் ஈடுபடுவது என்றும், கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுப்பது என்றும் ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டிருந்தது.

இதற்கு அமைவாக நேற்று யாழ்ப்பாண பல்கலைக்கழகத்திலும் ஒரு நாள் அடையாள வேலைநிறுத்தமும், கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டமும் இடம்பெற்றிருந்தது. (05)

# இந்திய மீனவரின் அத்துமீறலைக் கண்டித்து யாழ். மாவட்ட மீனவர்கள் உண்ணாவிரதம்








இந்திய மீனவர்களின் அத்துமீறிய செயற்பாட்டை கண்டித்து யாழ் மாவட்ட மீனவர்கள் உணவு தவிர்ப்பு போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

யாழ் மாவட்ட கிராமிய கடற்தொழில் அமைப்புக்களின் சம்மேளனமும், யாழ் மாவட்ட கடற் தொழில் கூட்டுறவு சங்கங்களின் சம்மேளனமும் இணைந்து நேற்று (செவ்வாய்க்கிழமை) காலை முதல் யாழ்ப்பாணம் புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயத்திற்கு முன்பாக உணவுதவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.



நேற்றுகாலை9.30மணிக்கு மருதடி சந்தியில் இருந்து பேரணியாக யாழ்.இந்திய துணைத்தூதரகம்நோக்கிசென்ற மீனவர்கள் துணைத் தூதரகம் முன்பாகப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

பின்னர் பொலிஸார் அங்கிருந்து வெளியேற்றியதை அடுத்து யாழ் புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயத்திற்கு முன்பாக தமது உணவு தவிர்ப்பு போராட்டத்தை மேற்கொண்டனர். (05)

## தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் முழுநாள் வேலைநிறுத்த போராட்டம்

(எம்.வை.அமீர்)

பல்கலைக்கழக தொழிற்சங்கங்கள், நிருவாக உத்தியோகத்தர்கள் சங்கங்கள், கல்விசார் ஆதரவு சங்கங்கள் மற்றும் அரசியல் சங்கங்களின் கூட்டுக் குழுவின் ஏகமனதான தீர்மானத்தின் அடிப்படையில், தென்கிழக்கு பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர் சங்கத்தின் தலைவர் எம்.ரி.எம். தாஜுடீனின் தலைமையில் நேற்று (செவ்வாய்க்கிழமை) பல்கலைக்கழக முற்றிலில் வேலைநிறுத்தத்துடன் கூடிய பாரிய போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

பல்கலைக்கழக ஊழியர்களில் குறிப்பிட்ட தரப்பினர் இடையிடையே வேலைநிறுத்தத்தில் குதிப்பதால் மாணவர்களின் கல்விநிலை உட்பட பல்வேறு செயற்பாடுகள் மந்தகதியிலேயே இடம்பெறுகின்றன.

பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தின் செயலாளர் எம்.எம். முகமது காமிலின் வழிகாட்டலில் இடம்பெற்ற குறித்த போராட்டத்தில் –

நாட்டின் கடுமையான பொருளாதார நெருக்கடியால் சடுதியாக அதிகரித்துள்ள வாழ்க்கைச் செலவை ஈடுசெய்ய முடியாத நிலையில், நீண்டகால சம்பள முரண்பாடுகளை சீர்செய்ய விடுக்கப்பட்ட கோரிக்கைகள் தொடர்ந்தும் உதாசீனம் செய்யப்படுவதை வெளிக்கொணருமுகமாகவும் அனைத்துப் பல்கலைக்கழகங்களிலுமுள்ள கல்விசாரா ஊழியர்கள் இவ்வாறான முழுநாள் அடையாள பணிப்பகிஸ்கரிப்பை மேற்கொள்வதாக இங்கு கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன.

எங்களது போராட்டம் வாழ்வாதாரத்துக்கான போராட்டம் என்றும் நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதாரநிலைவரங்களின்காரணமாகஎங்களது ஊழியர்கள் தங்களது வாழ்வைக் கொண்டுசெல்ல மிகுந்த சிரமங்களை எதிர்நோக்குகின்றனர் என்றும் ஒரே நிறுவனத்தில் பணியாற்றும் ஒரு தரப்பினருக்கு சம்பள அதிகரிப்பை வழங்கிவிட்டு, எங்களுக்கு வாக்குறுதி தந்து அரசு ஏமாற்றி வருகின்றது என்றும் எங்களது சம்பள விடயத்தில் அரசு பாகுபாடாக நடந்துள்ளது அப்பட்டமான உண்மை என்றும் இவ்வாறான நிலை நீடிக்குமாக இருந்தால் நாங்கள் தொடர் போராட்டம் ஒன்றுக்கு செல்வதைத்தவிர வேறு வழியில்லை என்றும் தென்கிழக்கு பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தின் தலைவர் எம்.ரி.எம். தாஜுடீன் தெரிவித்தார்.

இன்றும் இடம்பெற்ற இப்போராட்டத்தில் வாக்களிக்கப்பட்ட107%சம்பளஅதிகரிப்பைவழங்கு, உறுதியளித்த25%ஆஊயுகொடுப்பனவைவழங்கு என்பனபோன்ற பல்வேறு கோரிக்கைகளுக்கு அரசாங்கம் தீர்வை தர வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தி கோஷங்கள் எழுப்பப்பட்டன.

நேற்று ஒற்றுமையே பலம், சமத்துவமே எம் தேவை, அரசாங்கமே கண்முளித்துப்பார், 8 வருட ஏமாற்றம் இன்னும் தொடருமா?, வேண்டாம் வேண்டாம் பாகுபாடு வேண்டாம், புத்திஜீவிகளை உருவாக்கும் அரச ஊழியர்களாகிய நாங்கள் நடுத்தெருவில் என்பன போன்ற கோஷங்கள் எழுப்பப்பட்டன.

பல்கலைக்கழக சொத்துக்களைப் பாதுகாக்கும்பொருட்டு பாதுகாப்பு உத்தியோகத்தர்களின் கடமைகளை மட்டுப்படுத்தப்பட்ட அவசியமான அல்லது அவசியம் என கருதும் இடங்களில் மாத்திரம் தங்களது சேவையை வழங்கியுள்ளதாகவும், குறித்த கடமையின் நிமித்தம் சீருடைகளை அணியாது சாதாரண உடையில் அவர்கள் பணியாற்றுவதாகவும் ஏனைய அனைத்து விதமான சேவை வழங்கும் உத்தியோகத்தர்களும் தங்களது கடமைகளில் இருந்து விலகியுள்ளனர் எனவும் இங்கு தெரிவிக்கப்பட்டது. (05)




## பச்சிளம் குழந்தை கொலை தாயார் உட்பட மூவர் கைது



முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவிற்குட்பட்ட விசுவமடு இளங்கோபுரம் பகுதியில் வசிக்கும் பெண்ணொருவர் கணவனை பிரிந்து வாழும் நிலையில் தவறான உறவின் மூலம் கற்பமடைந்துள்ளார் .

இந்நிலையில் கடந்த வெள்ளிக்கிழமை இரவு குழந்தையை பெற்றெடுத்த நிலையில் பிள்ளையை கொலை செய்துள்ள குறித்த பெண் கிளிநொச்சி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்திருந்தார். இந்த விடயம் புதுக்குடியிருப்பு பொலிஸாருக்குத்தெரியப்படுத்தப்பட்டநிலையில் விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் குறித்த பெண்ணுடன் மூவரைக் கைது செய்துள்ளனர்.

குழந்தையைகுறித்தபெண்ணின் வீட்டில் பிரசவித்து பொலித்தீன் பையால் சுற்றப்பட்டு கொண்டு சென்று புளியம்பொக்கணை பெரிய குளம் பகுதியில் எரித்ததாகவும் குறித்த பெண்ணுடன் தொடர்பு எனச் சந்தேகிக்கப்படும் பாஸ்ரர் ஒருவர் குழந்தையை எரிப்பதற்கு உதவி புரிந்துள்ளார் எனவும் அந்தப் பெண் தெரிவித்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.



குறித்த பகுதிக்கு நேற்று (செவ்வாய்க்கிழமை) சென்ற முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி தர்மலிங்கம் பிரதீபன் மேற்படி சம்பவ இடத்தைப் பார்வையிட்ட போது, குழந்தையை கொண்டு சென்று எரித்ததாக கூறப்படும் பகுதியில் இருந்து சில தடயப்பொருள்களை புதுக்குடியிருப்பு பொலிஸார் மீட்டுள்ளனர் என நீதிபதியிடம் புதுக்குடியிருப்பு பொலிஸார் தெரிவித்தனர். இதனையடுத்து தடய பொருள்களை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

மேற்படி சம்பவம் தொடர்பில் குறித்த பெண்ணும், பெண்ணின் தாயாரும், பாஸ்ரர் உட்பட மூவர் புதுக்குடியிருப்பு பொலிஸாரால் சந்தேகத்தின்பேரில்கைதுசெய்யப்பட்டு தடுப்பில் வைக்கப்பட்டுள்ளனர்.

மேலதிக விசாரணைகளை புதுக்குடியிருப்பு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

குறித்த பெண் (வயது-29) விசுவமடு இளங்கோபுரம் பகுதியிலுள்ள சிவில் பாதுகாப்பு திணைக்களத்தில் பணிபுரிந்துவருகிறார் எனத் தெரிவிக்கப்படுகிறது. (05)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 20.03.2024இல் வெளியிடப்பெற்றது